# புதிய ஜனநாயகம்

செப்டம்பர் 2013
ரூ.10.00




## மறுகாலனியாக்கம்

# திவால்!




# “வகுப்பறையைக் கட்டு! வாத்தியாரைப் போடு!”

## ஆகஸ்டு 15 அன்று கல்வி உரிமைக்கான போராட்டம்!

போலீஸ் மைதானங்களும் பள்ளிமைதானங்களும்தான் ஆகஸ்டு 15 சுதந்திரதினக் ‘‘கொண்டாட்டம்’’ நடக்கும் முக்கியமான இரண்டு இடங்கள்; இந்த வழக்கத்துக்கு மாறாக, ஆகஸ்டு15 அன்று கல்வி உரிமைக்கான போராட்டத்தை நடத்தியதன் மூலம் ஒரு புதிய முன்மாதிரியைப் படைத்திருக்கிறார்கள் விருத்தாசலம் நகரின் மாணவர்கள்.

தமிழகத்தில் தனியார் கல்விக்கொள்ளை தலைவிரித்தாடுவதையும், அரசுப் பள்ளிகள் திட்டமிட்டே ஒழித்துக் கட்டப்படுவதையும் விளக்குவதற்கு அதிகமான விவரங்கள் தேவையில்லை. தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 2012-13 நிலவரப்படி, தமிழகத்தில் 2,253 அரசுப் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகள்; 16,421 பள்ளிகளில் இரண்டே ஆசிரியர்கள். முப்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்பது அரசே நிர்ணயித்திருக்கும் விகிதம். ஆனால் சுமார் 4.5 இலட்சம் மாணவர்களைப் பொருத்தவரை நூறு பேருக்கு ஒரு ஆசிரியர் என்பதுதான் உண்மை நிலை. 22,000 ஆசிரியர் பணியிடங்கள் காலியாகஉள்ளன. சுமார் ஒரு இலட்சம் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். பல அரசுப்பள்ளிகளில் போதிய வகுப்பறைகள் இல்லாமல் மரத்தடியில் வகுப்புகள் நடக்கின்றன. சுகாதாரமான குடிநீர், கழிவறை, சமையலறை, நூலகம், சோதனைச்சாலை, விளையாட்டு மைதானம் போன்றவை பல பள்ளிகளில் கிடையாது.

தனியார் கல்விக் கொள்ளையைக்கு முடிவு கட்ட வேண்டுமானால், அரசுப் பள்ளிகளை மேம்படுத்தப் போராட வேண்டும் என்று முடிவு செய்து, ‘‘வகுப்பறையைக் கட்டு! வாத்தியாரைப் போடு!’’ என்ற முழக்கத்துடன் ஆகஸ்டு 15 அன்று ஆர்.டி.ஓ. அலுவலக முற்றுகை போராட்டத்தை அறிவித்தன கடலூர் மாவட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையமும், மாணவர் உரிமைக்கான பெற்றோர் சங்கமும்.




இப்போராட்டத்தையொட்டி விருத்தாசலம் சுற்றுவட்டாரத்தில் உள்ளசுமார் 20 மேல்நிலைப் பள்ளிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை முதல்எல்லா விதமான குறைபாடுகள் குறித்த விவரங்களும் திரட்டப்பட்டன. கடலூர் மாவட்டம் முழுவதும் ஊர்ஊராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, பள்ளி மாணவர்கள், பெற்றோர்களிடமும் மாணவர் விடுதிகளிலும் பத்தாயிரம் துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. மாணவர்களும் பெற்றோர்களும்திரளாகப் பங்கு பெறுகின்ற போராட்டமாக இதனை மாற்ற வேண்டும் என்ற முனைப்புடன் நடத்தப்பட்ட இந்தப் பணிகள் பயனளிக்காமலில்லை.

ஆகஸ்டு 15 அன்று பேரணிக்கு அனுமதி இல்லை என்று போலீசு மறுத்திருந்த போதிலும், காலை பத்து மணிக்கே சட்டையில் மூவண்ணக் கொடியும், வாயில் மிட்டாயுமாகத் திரண்டு விட்டார்கள் மாணவர்கள்.

‘‘குடிநீருக்கு வழியில்ல; சிறுநீர் கழிக்க இடமில்ல; வாத்தியார் இல்லை; வகுப்பறை இல்லை; யாருக்கடா சுதந்திரம்? வெங்காய சுதந்திரம்!’’ என்று முழங்கியபடி சுமார் 100 பேருடன் பேருந்து நிலையத்தில் துவங்கிய ஊர்வலம் சற்று நேரத்துக்குள் 500 பேராகப் பெருகியது. சாலையோரம் நின்று ஊர்வலத்தையும் முழக்க அட்டைகளையும் கவனித்த மக்கள் பலர், அடுத்த சில நொடிகளில் தாமாகவே வந்து பேரணியில் இணைந்தார்கள். இருமருங்கிலும் திரளான மக்கள் பேரணியை அக்கறையுடன் கவனித்தார்கள். பாலக்கரை அருகே பேரணியைத் தடுத்து கைது செய்தது போலீசு. ‘‘அரசுப் பள்ளிக் கூடங்களை அழிக்கும் தனியார் கல்விக் கொள்ளையர்களை அனுமதியோம்!’’ என்ற முழக்கத்தை மக்கள் தமது சொந்த முழக்கமாக ஏற்றுக் கொள்கின்றனர் என்பதை விவசாயிகள், மாணவர்கள், வழக்குரைஞர்கள், முன்னாள் தலைமையாசிரியர்கள் போன்ற பல தரப்பினரின் உணர்வு பூர்வமான பங்கேற்பு காட்டியது.

– பு.ஜ.செய்தியாளர்,
விருத்தாசலம்.

புதிய
ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 28 இதழ்: 11
செப்டம்பர் 2013

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

## செல்லாக்காசாகிறது ரூபாய்!

# திவாலாகிறது மறுகாலனியாக்கப் பாதை!

டாலருக்கு எதிராக ரூபாய் உள்ளிட்ட பல நாட்டு நாணயங்களின் மதிப்பும் மிகப்பெரும் வீழ்ச்சியை சந்தித்து வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக சுமார் 2 டிரில்லியன் டாலர் நோட்டுகளை அடித்து தனது பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முயன்ற அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ், உள்நாட்டு பொருளாதார நிலைமை ஓரளவு சீர்பட்டிருப்பதாக கருதுவதால் நோட்டு அடிப்பதை நிறுத்தவிருப்பதாக மே 22 அன்று அறிவித்தது. இது உலகச் சந்தையில் டாலருக்கான வேண்டலை (demand)அதிகப்படுத்தியதுடன் அமெரிக்காவில் வட்டி விகித உயர்வுக்கும் வழி வகுக்குமாதலால், சர்வ தேச முதலீட்டாளர்கள் தமது முதலீட்டை அமெரிக்காவுக்கு மாற்றி வருகின்றனரென்றும், இதனால் இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இந்தோனேசியா உள்ளிட்ட பல நாடுகளில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு டாலருக்கு எதிராக அந்நாட்டு நாணயங்களின் மதிப்பு குறைந்து வருகிறதென்று விளக்கமளிக்கப் படுகிறது. பொதுவில் பார்க்குமிடத்து இந்த விளக்கம் சரியே எனினும், மற்ற நாணயங்களைக் காட்டிலும் மிக மோசமான வீழ்ச்சியை ரூபாய் ஏன் சந்திக்கிறது என்ற கேள்விக்கும், ஏப்ரல் 2011 முதல் ஏப்ரல் 2013 வரையிலான காலத்திலேயே டாலருக்கு எதிராக கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு மதிப்பை ரூபாய் ஏன் இழந்தது என்ற கேள்விக்கும் இதில் விடையில்லை.

ரூபாயின் வீழ்ச்சி குறித்து மக்களவையில் அறிக்கை வெளியிட்ட மன்மோகன்சிங், ''எண்ணெய் மற்றும் தங்கத்துக்கான பசியை மக்கள் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று உபதேசித்திருக்கிறார். 2012-ஆம் ஆண்டின் மொத்த இறக்குமதி 488.6 பில்லியன் டாலர்கள். இதில் எண்ணெய் இறக்குமதி மட்டும் 155.6 பில்லியன் டாலர்கள். 1970-களில் தனது எண்ணெய்த் தேவையில் 30% மட்டுமே இறக்குமதி செய்த இந்தியா இன்று 70% இறக்குமதி செய்கிறது. காரணம், ஆட்டோமொபைல் முதலாளிகளின் லாபத்துக்காக பொதுப்போக்குவரத்தை அழித்து கார், இரு சக்கர வாகன விற்பனையை அதிகரிக்கும் கொள்கை, மறுகாலனியாக்க வளர்ச்சியின் அங்கமாகத் திணிக்கப்பட்டதுதான். நகைக் கடைகளின் திடீர் பெருக்கத்துக்கும், தங்க இறக்குமதி அதிகரிப்புக்கும் காரணம், மறுகாலனியாக்கத்தால் ஆதாயமடைந்த தரகு, அதிகார வர்க்க, அரசியல் பிழைப்புவாதக் கும்பல்களின் ஆடம்பரமும், அவர்கள் தமது கருப்புப் பணப் பதுக்கலுக்கும் ஊகபேர சூதுக்கும் தங்கத்தில் முதலீடு செய்ததுதான். கார்கள் நகைக்கடைகள் போன்றவைதான் ஒளிரும் இந்தியாவின் சான்றுகளாக தனியார்மய தாசர்களால் காட்டப்பட்டன. அவைதான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம் என்பதன் பொருள் இது மறுகாலனியாக்க கொள்கைகள் தோற்றுவித்துள்ள நெருக்கடி என்பதே.

இப்பிரச்சினை குறித்து மாநிலங்களவையில் விளக்கமளித்த ப.சிதம்பரம், முதன் முறையாக ஒரு உண்மையைஒப்புக்கொண்டிருக்கிறார். ''2008-ஆம் ஆண்டில் சர்வதேசப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது இந்தியத் தொழிலகங்களுக்கு ஊக்கத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இந்த ஊக்கத் திட்டங்கள் இந்தியப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியது. அமெரிக்க பொருளாதாரத்தின் வீழ்ச்சி இந்தியாவைப் பாதிக்காமல் நம்மைப் பாதுகாத்தது. ஆனால் அதன் மற்றொரு விளைவாக நமது நிதிப் பற்றாக்குறையும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையும் அதிகரித்தது''(தினமணி, 28.8.2013). மக்களுக்கு வழங்கப்படும் மானியங்கள்தான் பற்றாக்குறைக்குக் காரணம் என்று இடையறாமல் மேற்கொள்ளப்பட்டு வரும் பொய்ப்பிரச்



> கார்கள், நகைக்கடைகள் போன்றவைதான் ஒளிரும் இந்தியாவின் சான்றுகளாகத் தனியார்மய தாசர்களால் காட்டப்பட்டன. அவைதான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம் என்பதன் பொருள், இது மறுகாலனியாக்க கொள்கைகள் தோற்றுவித்துள்ள நெருக்கடி என்பதே.

சாரத்துக்கு நடுவே, தவிர்க்கவியலாமல் சிதம்பரத்தின் வாயிலிருந்து வெளிவந்திருக்கும் இந்த உண்மை, ஆளும் வர்க்கமும் அவர்களால் இந்த நாடு இழுத்துச் செல்லப்படும் மறுகாலனியாக்க ''வளர்ச்சி''ப் பாதையும்தான் தற்போதைய நெருக்கடிக்குக் காரணம் என்ற உண்மைக்கு சான்று கூறுகின்றன.

''நமது பொருளாதாரத்தின் அடித்தளம் வலுவாக இருப்பதால் மீண்டும் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்போம்'' என்று கூறியிருக்கிறார் மன்மோகன் சிங். வளர்ச்சி சாத்தியமா என்பதைப் பரிசீலிப்பதற்கே, தற்போதைய வீழ்ச்சிக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

•••

நமது பொருளாதாரத்தின் அடித்தளம் என்று கூறப்பட்ட விவசாயம், தொழில்துறை ஆகியவற்றில், விவசாயத்தின் புறக்கணிப்பையும் அழிவையும் தனியார்மய-தாராளமயக் கொள்கைகள் தீவிரப்படுத்தியிருக்கின்றன. அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுக்கான ஏற்றுமதியைச் சார்ந்திருக்கும் தொழில்துறையும், அந்நாடுகள் பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்ததன் விளைவாக நலிந்து விட்டன. கடந்த சில ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் கண்டிருக்கும் வளர்ச்சி என்பது வேலைவாய்ப்பை உருவாக்காத வளர்ச்சி என்றே ஆய்வுகள் கூறுகின்றன.

2011-12-ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைத்துறை, விடுதிகள், வணிகம், ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமானத் தொழில்கள்தான் நமது பொருளாதாரத்தின் முதன்மையான இயங்கு சக்திகள் என்று கூறுகிறது. மன்மோகன்சிங் கூறுகின்ற அடித்தளம் இதுதான்.

இந்த அடித்தளத்தை இயக்குவதும், நிதியளிப்பதும் பன்னாட்டு மூலதனம் என்பதே உண்மை. எனவே மேற்கூறிய இந்தத் துறைகளிலான வளர்ச்சி என்பது பன்னாட்டு நிதிமூலதனம் இந்தியாவுக்குள் வெள்ளமெனப் பாய்ந்ததனால் ஏற்பட்ட விளைவாகும். 2000 ஆண்டுகளின் துவக்கத்தில் அமெரிக்காவில் ஏற்பட்ட ''டாட் காம் குமிழி வெடிப்பு'' என்று அழைக்கப்படும் பங்குச் சந்தை வீழ்ச்சியின் காரணமாக பன்னாட்டு நிதி மூலதன நிறுவனங்கள், ஒப்பீட்டளவில் அதிக இலாபம் தருகின்ற இந்தியா உள்ளிட்ட நாடுகளை நோக்கித் திரும்பின. இந்தியாவின் மலிவான உழைப்பைக் குறிவைத்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைத்துறைகளின் அவுட்சோர்சிங் தொழிலும் வளர்ந்தது.

2003-இல் இந்தியாவின் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 1%-ஆக இருந்த பன்னாட்டு மூலதனம் (நேரடி மூலதனம், நிதிக்கருவிகள், வங்கி கடன்கள் உள்ளிட்டவை) 2008-இல் 10% ஆக அதிகரித்தது. ரியல் எஸ்டேட், கட்டுமானத் தொழில், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைத்தல் ஆகியவற்றில் 100% அந்நிய மூலதனம் அனுமதிக்கப்பட்டது. பிரைவேட் ஈக்

ஏற்றுமதி செய்வதற்காக சென்னை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஹூண்டாய் கம்பெனி கார்கள்: சொகுசு கார் உற்பத்தி பெருகியது; நடப்புக் கணக்குப் பற்றாக்குறை வீங்கியது!



# ரூபாய் வீழ்ச்சியின் விலையை கொடுப்பது யார்?

‘‘உலகம் பொருட்களை உற்பத்தி செய்கிறது. அமெரிக்கா டாலர் நோட்டை உற்பத்தி செய்கிறது’’ என்றொரு கேலியான சொலவடை உண்டு. 2008 சப் பிரைம் நெருக்கடிக்குப் பிறகு, திவாலாகிப் போன அமெரிக்க வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கைதூக்கி விட்டு, பொருளாதாரத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு, நோட்டு அடிக்கத் தொடங்கியது அமெரிக்கா. 2007-இல் சுமார் 850 பில்லியன் டாலர்களாக இருந்த டாலர் புழக்கம் 3 டிரில்லியன் டாலர் என்ற அளவை எட்டும் வரை பெடரல் ரிசர்வ் தலைவர் பெர்ன் பெர்னென்கே அச்சு எந்திரத்தை நிறுத்தவில்லை போலும்! வேறு எந்த நாடாவது இப்படி நோட்டு அடித்திருந்தால், அந்த நாட்டின் பணம் மதிப்பிழந்து போயிருக்கும். ஆனால் இங்கோ டாலருக்கு எதிராக பிற நாணயங்களின் மதிப்பு தான் குறைந்து வருகிறது.

காரணம், டாலர் உலகச் செலாவணியாக இருக்கிறது. அமெரிக்காவுக்கான ஏற்றுமதியை நம்பித்தான் பல நாடுகளின் தொழில்கள் இயங்குகின்றன. அரசியல்-ராணுவ ரீதியாக அமெரிக்க மேலாதிக்கம் பெற்றுள்ள வலிமைதான் டாலரின் மதிப்பை தாங்கி நிற்கிறது.

ரூபாய் மதிப்பு வீழ்ச்சி என்பதன் பொருள் என்ன? இது பெட்ரோல், டீசல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையை உயர்த்தும். இந்த விலைவாசி உயர்வை சமாளிப்பதற்காக, நாம் செலுத்தும் கூடுதல் உழைப்பு, வாங்கும் கடன், பட்டினிச்சாவுகள், தற்கொலைகள் ஆகிய அனைத்தும், டாலருக்கு - அதாவது பன்னாட்டு மூலதனத்துக்கு நாம் கொடுக்கும் ரத்தப்பலி. ரூபாயின் மதிப்பு குறையக்குறைய, முன்னிலும் கூடுதல் உழைப்பையும் கூடுதல் வளங்களையும் ஏற்றுமதி செய்வதற்கு, குறைவான அந்நியச் செலாவணியே (டாலர்) கிடைக்கும். இது, அமெரிக்கா தனது நெருக்கடியை நம் மீது இறக்கி வைக்கும் சதி. உலக முதலாளித்துவம் மற்றும் இந்தியத் தரகு முதலாளிகள் எதிர்கொள்ளும் நெருக்கடியின் சுமையை, நம்மீது தள்ளுவது என்பது இது தான்.

விடி, ஹெட்ஜ் ஃபண்டு, வென்சர் காபிடல் போன்ற நிதி மூலதனம் மற்றும் நிதி சூதாட்டக் கருவிகள் அனைத்தையும் அந்நிய நேரடி முதலீடாகக் கருதி சலுகைகள் வழங்கப்பட்டன. அடையாளம் தெரியாத அந்நிய முதலீட்டாளர்கள் தாராளமாக அனுமதிக்கப்பட்டனர். இந்தியத் தரகு முதலாளிகள் தங்களது கருப்புப் பணத்தை மொரிசியஸ், கேமேன் தீவுகள் போன்ற வரியில்லா சொர்க்கங்களின் வழியாக அந்நிய முதலீடு என்ற பெயரில் உள்ளே கொண்டு வருவது அனுமதிக்கப்பட்டது. இந்தியத் தரகு முதலாளிகள் பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் நேரடியாக கடன் வாங்கிக் கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.

இவையனைத்தும் பங்குச் சந்தை, நாணயச் சந்தை, ரியல் எஸ்டேட் போன்ற ஊகவணிகம் சார்ந்த துறைகளில்தான் முதலீடு செய்யப்பட்டன. இத்தகைய முதலீடுகள் புதிதாக எதையும் உற்பத்தி செய்யவில்லை. இருக்கின்ற நிலம், மனைகள் மற்றும் பங்குகளின் மதிப்பை மட்டும் உயர்த்தின. இந்த சோப்புக் குமிழிதான் வளர்ச்சி வீதத்தின் அதிகரிப்பு என்றும், பங்குச்சந்தை குறியீட்டு எண்கள் எகிறுகின்றன என்றும் கொண்டாடப்பட்டது. இத்தகைய மாய்மாலங்களால் மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருந்த போதே இந்தியாவின் அந்நியக் கடன், வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து கொண்டிருந்தது.

•••

பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் இந்தியா வாங்கிய கடன் 2006-07 இல் 62.3 பில்லியன் டாலர் என்பதிலிருந்து டிச. 2012-இல் 376.3 பில்லியன் டாலராக உயர்ந்தது. இதில் குறுகிய காலக் கடன் மட்டுமே 159.6 பில்லியன் டாலர்கள். மார்ச் 2014-க்குள் 172 பில்லியன் டாலர் அந்நியக் கடனை இந்தியா திருப்பிக் கொடுக்கவேண்டும். இந்த 172 பில்லியனில் 44 சத வீதத் தொகையானது இந்தியத் தரகுமுதலாளிகள் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் வாங்கியிருக்கும் கடனாகும்.

‘‘இந்தியாவின் முதல் பத்து தொழில் நிறுவனங்கள் வாங்கியிருக்கும் கடன் கடந்த 6 ஆண்டுகளில் 6 மடங்கு அதிகரித்து தற்போது 120 பில்லியன் டாலராக உள்ளது. இவற்றில் பெரும்பகுதி பன்னாட்டு வங்கிகள், நிதி நிறுவனங்களிடம் வாங்கப்பட்டிருக்கும் கடன்கள். 2007-இல் தொடங்கி இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளம் சீரழிந்து வருகிறது என்கிறார் மார்கன்

> 2000 ஆண்டுகளின் துவக்கத்தில் அமெரிக்காவில் ஏற்பட்ட ‘‘டாட் காம் குமிழி வெடிப்பு’’ என்று அழைக்கப்படும் பங்குச்சந்தை வீழ்ச்சியின் காரணமாக பன்னாட்டு நிதிமூலதன நிறுவனங்கள், ஒப்பீட்டளவில் அதிக இலாபம் தருகின்ற இந்தியா உள்ளிட்ட நாடுகளை நோக்கித் திரும்பின. இந்தியாவின் மலிவான உழைப்பைக் குறிவைத்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைத்துறைகளின் அவுட்சோர்சிங் தொழிலும் வளர்ந்தது.





ரியல் எஸ்டேட் துறையின் வளர்ச்சி, உழைக்கும் மக்களை வீதிக்குத் துரத்தியடித்திருக்கிறது.

ஸ்டான்லி நிறுவனத்தின் ருசிர் சர்மா (டைம்ஸ் ஆப் இந்தியா, 28.8.13). ஸ்டாண்டர்டு அண்டு புவர் நிறுவனம், முதலீடு செய்வதற்கான இந்தியாவின் தர மதிப்பீட்டை (investment rating) (BBB) என்ற ஆகத்தரம் தாழ்ந்த நிலையில் வைத்திருக்கிறது. ''குப்பை'' என்ற இதற்கடுத்த நிலைக்குத் தாழ்ந்து விட்டால், பிறகு இந்திய அரசோ, தொழில் நிறுவனங்களோ பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்குவது மிகவும் கடினமாகிவிடும்.

ஆனால் தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5%-ஆக உயர்ந்து விட்ட நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை குறைத்து, டாலர் கையிருப்பை அதிகரிப்பதற்கு, வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்குவதையே ஒரு தீர்வாக அமல்படுத்துகிறது மன்மோகன் அரசு. இலாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்கும் கடன் சந்தையில் மதிப்பிருக்குமென்பதால், அவர்களை வெளிநாட்டுச் சந்தையில் கடன் வாங்க வேண்டுமென்றும், அரசாங்கத்தைப் போலவே கடன் பத்திரங்கள் வெளியிட்டு டாலரைத் திரட்ட வேண்டும் என்றும், அந்த கடன் பத்திரங்களுக்கான வட்டியை அவர்களே கொடுத்துவிட வேண்டும் என்றும் சென்ற மாதம் கூறியிருக்கிறார் ப.சிதம்பரம்.

''வருவாய் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கு மானியங்களை வெட்டுவது, அந்நியச் செலாவணி இருப்பை மேம்படுத்துவதற்கு அந்நிய முதலீட்டை ஊக்குவிப்பது - நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்குவது, சுற்றுச் சூழல் பிரச்சினைகளாலும் நீதிமன்ற வழக்குகளாலும் தடைப்பட்டிருக்கும் நிலக்கரி, இரும்புச் சுரங்கங்களை இயங்க வைப்பது'' — என்று அந்நிய முதலீட்டாளர்களை மனம் குளிரச்செய்யும்படியான பத்து அம்ச திட்டத்தை வெளியிட்டு அவர்களைக் கவர்ந்திழுக்க முயன்றிருக்கிறார் சிதம்பரம்.

மன்மோகனின் அறிக்கையோ வரவிருக்கும் இருண்ட காலத்துக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது. ''ரூபாய் எவ்வளவு வீழ்ச்சியடைந்தாலும், அதன் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக வெளியேறும் அந்நிய மூலதனத்தைத் தடுக்க மாட்டோம். தனியார்மய - தாராளமய கொள்கையிலிருந்து பின்வாங்க மாட்டோம். கடந்த காலத்தில் செய்யப்பட்டவை சுலபமான சீர்திருத்தங்கள். ஓய்வூதிய நிதி மற்றும் காப்பீடு தனியார்மயம், மானிய வெட்டுகள், பொருள்கள் மற்றும் சேவை வரி போன்ற கடுமையான சீர்திருத்தங்கள் வரவிருக்கின்றன. எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்'' என்றவாறு ஆகஸ்டு 30 அன்று மக்களவையில் பேசியிருக்கிறார் மன்மோகன்.

எதைச் செய்தாவது அந்நிய மூலதனத்தை ஈர்த்தாக வேண்டும் என்ற வெறித்தனத்தின் விளிம்பில் அரசும் ஆளும் வர்க்கங்களும் நின்று கொண்டிருக்கின்றன. அந்நியக் கடன்கள், முதலீடுகள் பெருகப் பெருக, அவற்றுக்கான வட்டியும், இலாப ஈவுத்தொகையும் அதிகரித்த அளவில் வெளியேறுகின்றன. வெளியே செல்லும் இந்த டாலர்கள் மீண்டும் நடப்புக் கணக்கு பற்றாக்குறையை அதிகரிக்கச் செய்கின்றன. இந்த நச்சுச் சுழல் நாட்டை திவால் நிலையை நோக்கி - முழு அடிமை நிலையை நோக்கிக் கொண்டு செல்கிறது. பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்கள் இந்தியாவிலிருந்து தற்போது எடுத்துச் செல்லும் இலாப ஈவுத்தொகையின் விகிதம் (மொத்த உள்நாட்டு உற்பத்தியோடு ஒப்பிடும்போது) பிரிட்டிஷ் காலனியாதிக்க காலத்தோடு ஒப்பிடத்தக்கதாக இருக்கிறது என்று கூறுகிறார் ஒரு ஆய்வாளர். (நிர்மல் குமார் சந்திரா, EPW, 5.4.2008)

ரூபாயின் வீழ்ச்சியானது, தனியார்மய-தாராளமய கொள்கைகள் குறித்த பிரமைகளை அகற்றி, மறுகாலனியாக்கத்தின் விகாரமான முகத்தை அம்பலமாக்கியிருக்கிறது. மன்மோகன் குறிப்பிடும் கடுமையான சீர்திருத்தம் என்பது கடுமையான அரசியல் ஒடுக்குமுறைக்கான முன்அறிவிப்பு. நிலப்பறிப்பு தொடங்கி ஜனநாயக உரிமை பறிப்பு வரையிலான எல்லா நடவடிக்கைகளும் தேசிய நலன் கருதி சர்வகட்சி ஒத்துழைப்புடன் நடக்கும். எனவே இதனை முறியடிக்க வேண்டுமானால், அதற்கான போராட்டத்தை நாடாளுமன்ற அரசியல் சட்டகத்துக்கு வெளியே, ஒரு புதிய ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டமாகத்தான் நாம் நடத்த முடியும், நடத்த வேண்டும். ●

## சிரியா:

# அடுத்த இராக்?

**சிரியா மீது கவிழ்ந்திருக்கும் போர் அபாயம், அந்நாட்டில் மட்டுமின்றி, மேற்காசியா முழுவதும் மத – இன மோதல்களைத் தீவிரப்படுத்தி அப்பிராந்தியத்தைப் பேரழிவுக்குள் தள்ளிவிடும்.**

சிரியா மீது ஒரு அநீதியான, ஆக்கிரமிப்புப் போரைத் தொடுப்பதற்கான தயாரிப்புகளை அமெரிக்காவும் மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளும் முடுக்கிவிட்டுள்ளன. ''இராக் மீது நடத்தப்பட்டதைப் போன்று இல்லாமல், இது ஒரு சிறிய தாக்குதலாக இருக்கும்'' என அமெரிக்க அதிபர் ஒபாமா பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கிறார். இங்கிலாந்தும் பிரான்சும் தங்கள் நாடுகளின் இராணுவ கவுன்சில்களைக் கூட்டி ஆலோசனை நடத்துகின்றன. இன்னொருபுறமோ, சிரியாவிலிருந்து 160 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சைப்ரஸ் நாட்டின் அக்ரோதிரி இராணுவ விமான தளத்தில் இங்கிலாந்து நாட்டு இராணுவ விமானங்கள் தரையிறக்கப்பட்டுள்ளன. மத்திய தரைக் கடல் பகுதியில் அமெரிக்கா தனது நான்கு போர்க் கப்பல்களைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகளான ரசியாவும் சீனாவும் இந்தப் போர் முஸ்தீபுகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. ''நாங்கள் எதிர்த்துப் போரிடுவோமே தவிர, சரணடைய மாட்டோம்'' என அறிவித்திருக்கிறது, சிரியாவின் அல்-அஸாத் அரசு. சிரியா மீது போர் தொடுப்பதில் அமெரிக்காவை விஞ்சும் அளவிற்கு வெறியோடு திரியும் இங்கிலாந்து அரசுக்கு எதிராகவும் போருக்கு எதிராகவும் இலண்டனில் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

இராக் மீது போர் தொடுப்பதற்கு, ''சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தமது நாட்டில் பதுக்கி வைத்திருப்பதாக'' ஒரு பொய்யான குற்றச்சாட்டை அமெரிக்காவும் இங்கிலாந்தும் திட்டமிட்டு உருவாக்கி பரப்பின. சிரியா மீதான ஆக்கிரமிப்புப் போரை நியாயப்படுத்துவதற்கு, ''அஸாத் அரசு கடந்த ஆகஸ்டு 21 அன்று சிரிய நாட்டின் தலைநகரான டமாஸ்கஸிலுள்ள அல்-கௌதா என்ற பகுதி மீது இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும், அதில் சிக்கி குழந்தைகள் - சிறுவர்கள் உள்ளிட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மாண்டுவிட்டதாகவும்'' குற்றஞ்சுமத்துகின்றன.

அஸாத் அரசிற்கு எதிராக ஆயுதத் தாக்குதல்களைத் தொடுத்துவரும் அல்-நுஸ்ரா என்ற முசுலீம் அடிப்படைவாத அமைப்புதான் இக்குற்றச்சாட்டை முதலில் தெரிவித்தது. இத்தாக்குதலில் 200-க்கும் மேற்பட்டோர் இறந்து போனதாக முதலில் கூறப்பட்டு, பின்னர் சாவு எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டது. இப்படியொரு தாக்குதல் நடந்திருப்பதும் சாவு எண்ணிக்கையும் உண்மைதானா? உண்மையென்றால், இத்தாக்குதலை நடத்தியது அஸாத் அரசா அல்லது ஆயுதந்தாங்கிய எதிர்த்தரப்பா என்ற கேள்விகளுக்கெல்லாம் இதுவரை நம்பத்தகுந்த பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அஸாத் அரசின் அனுமதியுடன் சிரிய நாட்டிற்குச் சென்றுள்ள ஐ.நா. குழுவொன்று இத்தாக்குதல் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. அந்த ஆய்வு முடிவுகள் வெளிவருவதற்கு முன்பே, அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள், ''அந்தத் தாக்குதலை அஸாத் அரசுதான் நடத்தியது; அதற்கான

ஆகஸ்டு-21 அன்று சிரிய அரசு நடத்திய இரசாயன ஆயுதத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சிறுவர்களின் சடலங்கள்.




**ஜப்பான் மீது அணுகுண்டை வீசிய அமெரிக்கா, வியட்நாம் மீது ஏஜெண்ட் ஆரஞ்ச் என்ற இரசாயன ஆயுதத்தை வீசிய அமெரிக்கா, இராக் மீது செறிவு குறைந்த அணு ஆயுதங்களைப் பிரயோகித்த அமெரிக்கா, அஸாத்தின் வசமுள்ள இரசாயன ஆயுதங்களிலிருந்து சிரிய மக்களைக் காப்பாற்றுவதற்குத்தான் போர் தொடுக்கப் போவதாகக் கூறுவது வக்கிரம் நிறைந்த வரலாற்று முரண் அல்லவா!**

ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன'' என்று பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டன.

இத்தாக்குதலில் பலியானதாகக் கூறப்படும் குழந்தைகளின் புகைப்படம் உலகெங்கும் பரவலான அனுதாபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த அனுதாபத்தைச் சூட்டோடு சூடாகத் தமது தீயநோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முனைந்துள்ளன, மேற்குலக ஏகாதிபத்தியங்கள். ''இந்தத் தாக்குதலுக்காக சிரிய அதிபரைக் கண்டிக்க வேண்டும்; சிரிய மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்கத் தங்களை அனுமதிக்க வேண்டும்'' எனக் கோரும் தீர்மானமொன்றை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அளித்திருக்கிறது, அமெரிக்காவின் கைத்தடியான இங்கிலாந்து.

மனிதப் பேரழிவைத் தடுப்பதற்கு சிரியா மீது போர் தொடுப்பது அவசியமானது என நியாயவான்களைப் போலப் பேசுகின்றன மேற்குலக ஏகாதிபத்தியங்கள். ஜனநாயகம், மனித உரிமைகள், தீவிரவாத எதிர்ப்பு - எனக் கூச்சல் போட்டுக்கொண்டு இக்கும்பல் நுழைந்த ஆப்கான், இராக், லிபியா ஆகிய நாடுகளின் நிலைமை இன்று எப்படி உள்ளது தெரியுமா? ஆப்கான் பல்வேறு யுத்தப் பிரபுக்களின் போர்க்களமாக இன்று மாறி நிற்கிறது. அங்கு அமைதியை ஏற்படுத்த, தாலிபான் தீவிரவாதிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அமெரிக்காவின் சம்மதத்தோடு நடந்து வருகின்றன. சதாம் உசேன் ஆட்சியின் கீழ் ஓரளவு மத நல்லிணக்கம் நிலவிய இராக், இன்று மத, இன மோதல்களில் சிக்கி சின்னாபின்னமாகிக் கிடக்கிறது. அமெரிக்க ஆக்கிரமிப்பின் காரணமாகவும், மத-இன மோதல்களின் காரணமாகவும் இராக்கில் கடந்த பத்தாண்டுகளில் 1,25,000-க்கும் மேற்பட்டோர் இறந்து போய் நாடே சுடுகாடாகிவிட்டது. அன்று இராக்கில் இல்லாதிருந்த அல்-காய்தா, அமெரிக்க திணித்த 'ஜனநாயகம்' காரணமாக இன்று இராக்கில் உருவாகியிருப்பதோடு, அங்கிருந்து ஜிஹாதிகளை சிரியாவுக்குள் அனுப்பி வைக்கும் அளவிற்கு வலுவாக உள்ளது. லிபியாவோ பல்வேறு ஜிஹாதி குழுக்களின் பதவி வேட்டைக்கான பூமியாகிவிட்டது.

சிரிய அதிபர் பஷார் அல் - அஸாத்.



சிரியாவில் அஸாத்தின் ஆட்சிக்கு எதிராக ஆயுதத் தாக்குதல்களை நடத்தி வரும் குழுக்களுள் பெரும்பாலானவை கூலிப்படை போன்றவைதான். இக்குழுக்களிலேயே மிகப் பெரிய அமைப்பான அல்-நுஸ்ரா, இராக்கிலுள்ள அல்-காய்தாவின் கைத்தடி அமைப்பாகும். இக்குழுவிற்குத் தேவையான பணம் மற்றும் ஆயுதப் பயிற்சியை கத்தார் நாட்டின் மன்னர் பரம்பரை அளித்து வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக ஏகாதிபத்தியங்களால் ஆதரிக்கப்படும் 'சுதந்திர' சிரிய இராணுவத்திற்கு சிரியாவில் வேரோ விழுதோ கிடையாது. ஆப்கான், செசன்யா, லிபியா, சூடான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள அல்-காய்தா ஜிஹாதிகளைக் கொண்டு இந்த இராணுவம் கட்டியமைக்கப்பட்டுள்ளது. சன்னி மத அடிப்படைவாதக் கட்சியான முசுலீம் சகோதரத்துவக் கட்சியை சவூதி அரேபியாவின் மன்னர் குடும்பம் ஆதரித்து வருகிறது.

அல்-காய்தா உள்ளிட்ட சன்னி மத அடிப்படைவாத அமைப்புகள் தங்களை அமெரிக்க எதிர்ப்பாளர்களைப் போலக் காட்டிக் கொள்வதெல்லாம் பம்மாத்து; உண்மையில் அம்மதவெறி அமைப்புகள் அமெரிக்காவின் கைக்கூலிகள் என்பதைத்தான் சிரியாவிலும் லிபியாவிலும் நடந்துள்ள, நடந்துவரும் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அதனால்தான் பெரும்பாலான சிரிய மக்கள், குறிப்பாக அந்நாட்டைச் சேர்ந்த சிறுபான்மையினரான ஷியா பிரிவு முசுலீம்களும், கிறித்தவர்களும், குர்து இன மக்களும் அமெரிக்காவின் தொங்குசதையான இந்த எதிர்த்தரப்பை, அஸாத்தின் ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சிக்கு மாற்றாகக் கருத மறுக்கிறார்கள். எதிர்த்தரப்பு ஆட்சி அதிகாரத்தைப் பிடித்து விட்டால், அஸாத் ஆட்சியின் கீழ் காணப்படும் மத நல்லிணக்கமும் சமூக இணக்கமும் ஒழிந்துபோய், சவூதி அரேபியா வகைப்பட்ட சலாபிகளின் மதவெறி சர்வாதிகாரம் சிரியாவிலும் கோலோச்சும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

அஸாத் அரசிற்கும் எதிர்த்தரப்புக்கும் இடையிலான ஆயுத மோதல்கள் கடந்த மூன்றாண்டுகளாக நடந்துவந்த போதும், எதிர்த்தரப்பு பெரிய வெற்றி எதையும் சாதிக்கவில்லை. குறிப்பாக, அக்கும்பலின் பிடியில் இருந்த சில பகுதிகளைக்கூட அரசுப் படைகள்

மீண்டும் கைப்பற்றிவிட்டன. இந்த நிலையில் சிரியாவில் நேரடியாகத் தலையிட்டால் அன்றி ஆட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என முடிவெடுத்த மேற்குலக ஏகாதிபத்திய அரசுகள், அதற்கு ஏற்றபடி சிரிய அரசு வசமுள்ள இரசாயன ஆயுதங்கள் குறித்துப் பீதியூட்டத் தொடங்கின. இதன் தொடர்ச்சியாக, அலெப்போ நகரை இரசாயன ஆயுதங்களைக் கொண்டு சிரிய அரசு தாக்கியதாக அல்-நுஸ்ரா குற்றஞ்சாட்டியது. ஐரோப்பிய யூனியன் இதைச்சாக்காகக் காட்டி, எதிர்த்தரப்புக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த பெயரளவுக்கான தடைகளையும் நீக்குவதாக அறிவித்தது. சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவது குறித்து நடைபெறவிருந்த ஜெனிவா பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போட்டது, அமெரிக்கா.



லெபனான் தலைநகர் பெய்ரூட்டிற்கு அகதியாக ஓடிவந்த சிரிய குடும்பம், நடைபாதையோரத்தில் தங்கியிருக்கும் அவலக் காட்சி.

அலெப்போவில் கடந்த ஜூனில் நடந்த இரசாயன ஆயுதத் தாக்குதல்கள் குறித்து நடத்தப்பட்ட விசாரணையில், அந்தத் தாக்குதலை எதிர்த்தரப்புதான் நடத்தியது என்பது அம்பலமான பிறகும் அமெரிக்காவும் எதிர்த்தரப்பும் சற்றும் அசராமல் அடுத்த குற்றச்சாட்டை அஸாத் அரசு மீது வீசியுள்ளன. ‘‘சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் குறித்து ஆய்வு செய்ய ஐ.நா. குழுவை அனுமதித்துள்ள நேரத்தில், எதிர்த்தரப்பின் வசமுள்ள அல்-கௌதா பகுதி மீது தாக்குதலை நடத்துவோமா?’’ எனக் கேள்வி எழுப்புகிறது, அஸாத் அரசு. ஆனால், அமெரிக்கா ஏகாதிபத்தியமோ இத்தாக்குதல் குறித்த ஐ.நா. ஆய்வின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும் விதத்தில், ‘‘ஐ.நா. தனது ஆய்வை மிகவும் தாமதமாகத் தொடங்கியிருப்பதாகவும், அஸாத் அரசு ஏற்கெனவே ஆதாரங்களை அழித்துவிட்டதாகவும்’’ அடித்துக் கூறிவருகிறது. ஐ.நா. ஆய்வு முடிவு எப்படியிருந்தாலும், சிரியா மீது தாக்குதல் தொடுப்பதை யாராலும் தடுக்க முடியாது என்ற தொனியில் இங்கிலாந்தும் பிரான்சும் சவால் விடுகின்றன.

மேற்காசியாவில் இரானின் செல்வாக்கை மட்டுப்படுத்தி, அதைத் தனிமைப்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் இரானில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதற்கும் சிரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதை முதல்படியாகக் கருதுகிறது, அமெரிக்கா. இதனால்தான் எந்தவிதமான சமாதான முன்னெடுப்புகளுக்கும் அமெரிக்கா ஒத்துழைக்க மறுக்கிறது.

அமெரிக்காவின் இந்த மேலாதிக்க வெறியின் காரணமாக, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ஆயுத மோதல்களில் சிக்கிக்கொண்டு ஏறத்தாழ ஒரு இலட்சம் சிரிய மக்கள் உயிரிழந்துள்ளனர். கிறித்தவர்கள், குர்து இனத்தவர்கள் உள்ளிட்ட ஏறத்தாழ 10 இலட்சம் சிரிய மக்கள் லெபனானிலும், இராக்கிலும், ஜோர்டானிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். சிரியாவில் ஒரு மிகப் பெரும் மனிதப் பேரழிவு நடந்து கொண்டிருப்பதைப் பற்றி அலட்டிக் கொள்ளாத அமெரிக்கா, போருக்குத் தயாராவது எத்துணை பெரிய அயோக்கியத்தனம்! முசுலீம் தீவிரவாதத்தை ஒழிப்பதற்காகவே அவதாரமெடுத்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா சிரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர முசுலீம் அடிப்படைவாத அமைப்புகளோடும், அல்-காய்தாவோடும் கூட்டுச் சேர்ந்திருப்பது எத்துணை பெரிய மோசடி! ஜப்பான் மீது அணுகுண்டை வீசிய அமெரிக்கா, வியட்நாம் மீது ஏஜெண்ட் ஆரஞ்ச் என்ற இரசாயன ஆயுதத்தை வீசிய அமெரிக்கா, இராக் மீது செறிவு குறைந்த அணு ஆயுதங்களைப் பிரயோகித்த அமெரிக்கா, அஸாத்தின் வசமுள்ள இரசாயன ஆயுதங்களிலிருந்து சிரிய மக்களைக் காப்பாற்றுவதற்குத்தான் போர் தொடுக்கப் போவதாகக் கூறுவது வக்கிரம் நிறைந்த வரலாற்று முரண் அல்லவா!

● செல்வம்

ஆகஸ்டு 15 அன்று இராக்கிற்கு அகதிகளாகத் தப்பியோடிய பல்லாயிரக்கணக்கான சிரிய மக்களுள் ஒரு பகுதி.



# மணற்கொள்ளையன் வைகுண்டராஜன்:

# தெற்கத்தி வீரப்பன்!

**நாட்டின் பொதுச் சொத்துக்களை ஏன் தனியாரிடம் கொடுக்க வேண்டும் என்ற மையமான கேள்வியை விட்டுவிட்டு, கார்னெட் மணற்கொள்ளையில் அம்பலமாகும் ஊழல் – முறைகேடுகளை மட்டும் பெரிதாக்கி ஊடகங்கள் பரபரப்பூட்டுகின்றன.**

ஜெயலலிதாவின் ஆட்சியில் அரசியல் குறுக்கீடுகள் அற்ற, திறமையான, நேர்மையான நிர்வாகம் நடப்பதாகவும், குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவதாகவும் பார்ப்பன ஊடகங்கள் உருவாக்கும் சித்திரம் எவ்வளவு மோசடியானது என்பதை கார்னெட் மணற்கொள்ளை விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களின் கடற்கரை முழுவதையும் கையில் வைத்துக் கொண்டு கார்னெட் மணல் ஏற்றுமதி செய்யும் தொழிலில் உலக அளவில் இரண்டாம் இடத்திலும், இந்திய அளவில் முதலிடத்திலும் இருந்து வருகிறார், வி.வி. மினரல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரான வைகுண்டராஜன். 'அம்மா'வின் ஆதரவோடு தொழில் நடத்திவரும் அவர், ஜெயா டி.வி.யின் பங்குதாரராக உள்ளதோடு, கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது 'அம்மா'வுக்குப் பெரிதும் உதவியாக நின்றதை அனைவரும் அறிவர். அப்பேற்பட்ட கோடீசுவர வைகுண்டராஜனின் நிறுவனம், அனுமதிக்கப்பட்ட இடத்தைத் தாண்டிச் சட்டவிரோதமாகத் தாது மணலை அள்ளி ஏற்றுமதி செய்துள்ளதா என்று ஆய்வு செய்ய கடந்த ஆகஸ்ட் 6-ஆம் தேதி உத்தரவிட்ட தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் ஆஷிஸ் குமார், அடுத்த 24 மணி நேரத்திற்குள் பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வி.வி.மினரல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரான வைகுண்டராஜன் தென் மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் தனி அரசாங்கமே நடத்தி வருகிறார் என்பது நாடறிந்த உண்மை. கடற்கரைப் பகுதியிலுள்ள செந்நிற மணலில் கார்னெட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், மோனசைட் முதலான விலைமதிப்பற்ற அரிய கனிமங்கள் கிடைக்கின்றன. மணலிலிருந்து அவற்றைப் பிரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் வைகுண்டராஜனின் தொழில். இந்திய சுரங்கக் கழகம் அனுமதி அளித்துள்ள 111 கார்னெட் மணல் குவாரிகளில் 96 அவருக்கும் அவரது பினாமிகளுக்கும் சொந்தமானது. மைய அரசால் அனுமதி தரப்பட்டுள்ள 44 இல்மனைட் குவாரிகள் அனைத்தும் அவருக்கே சொந்தமானது. மைய அரசின் சுற்றுச்சூழல் துறை, மாநில அரசின் மாசு கட்டுப்பாடு வாரியம், கடலோரப் பாதுகாப்புச் சட்டம், வனத் துறை - எனப் பல்வேறு துறைகளின் விதிகள், கட்டுப்பாடுகளையெல்லாம் கிடப்பில் போட்டுவிட்டு, கடற்கரையையும் அதையொட்டியுள்ள பகுதிகளையும் தனது பணபலத்தாலும் அதிகார பலத்தாலும் ஆக்கிரமித்து தாதுமணல் கொள்ளையை இக்கும்பல் நடத்தி வருகிறது.

வைகுண்டராஜன் கும்பலின் சூறையாடல்: இயற்கை அரணாக இருந்த மணல் குன்றுகளும் சவுக்கு மரங்களும் அழிக்கப்பட்டு தீவிரமாகிவரும் கடல் அரிப்பு.



தாது மணலிலுள்ள கனிமங்களைச் சேகரிக்கும், பிரிக்கும் நடவடிக்கைகளால் கதிரியக்கம் அதிகமாகிறது என்று ஆய்வுகள் நிரூபித்துள்ளன. ஏற்கெனவே குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சியில் அரசின் அருமணல் தொழிற்சாலைகளில் பாதுகாப்பும் கட்டுப்பாடுகளும் இருந்த போதும், சுற்றுப்புற கிராமங்களில் ஏறத்தாழ 500 பேருக்குப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ. 1000 உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. ஆனால் எவ்விதக் கட்டுப்பாடுமில்லாமல், விளைவுகளைப் பற்றிய அக்கறையும் இல்லாமல், ஒரு அந்நிய ஆக்கிரமிப்பாளனைப் போல வைகுண்டராஜன் கும்பல் இச்சூறையாடலை நடத்திக் கொண்டிருக்கிறது.

தென்மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் கடல் அலைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இயற்கையாகவே அமைந்திருந்த மணல் குன்றுகள் இக்கும்பலின் சூறையாடலில் தரைமட்டமாகி விட்டன. இதனால் பல ஊர்களில் கடல் நீர் புகுந்து, நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி, குடிநீருக்காக மக்கள் தவிக்கின்றனர். இங்குள்ள விவசாயிகளால் நடப்பட்ட ஆயிரமாயிரம் சவுக்கு மரங்களும், இயற்கையின் கொடையாகக் கருதப்படும் கடலோர அடையாளச் சின்னங்களாக நின்றிருந்த ஆயிரக்கணக்கான பனை மரங்களும் அழிக்கப்பட்டு விட்டன. கடலோர மணலிலிருந்து தாதுப் பொருட்களைப் பிரித்தெடுத்த பிறகு, கழிவு நீரையும் மணலையும் அதே பகுதியில் கொட்டுவதால், பல இடங்களில் கடல் நீரின் நிறமே சிவப்பாக மாறி விட்டது. கடலையொட்டி அதிக அளவில் மணல் எடுக்கப்படுவதால் மீன் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் அழிந்து மீனவர்களின் வாழ்வாதாரம் நாசமாக்கப்பட்டுள்ளது.



தாது மணலிலிருந்து கனிமங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் வெளியேற்றப்படும் கழிவுகளால் நாசமாக்கப்பட்ட கடலோரப் பகுதி.

தான் சார்ந்துள்ள நாடார் சாதியினரைச் சமூக அடித்தளமாகப் பயன்படுத்திக் கொண்டும், எல்லா ஊர்களிலும் பிழைப்புவாதிகளைக் கையாட்களாகக் கொண்டும் வைகுண்டராஜன் தனது மாஃபியா சாம்ராஜ்ஜியத்தை நடத்தி வருகிறார். இச்சூறையாடலை யாராவது எதிர்த்தால் அடுத்த நிமிடமே வைகுண்டராஜனின் அடியாட்கள் பயங்கர ஆயுதங்களுடன் வந்து தாக்குவதோடு, வீடுகளின் மீது வெடிகுண்டுகளை வீசுவதும் நடந்துள்ளன. இதனால் உயிருக்கு அஞ்சி பல குடும்பங்கள் ஊரை விட்டே ஓடிவிட்டன. பண பலம், சாதிய பலம், அதிகார பலத்தைக் கொண்டு சூறையாடலை நடத்திவந்த கிரானைட் கொள்ளையன் பி.ஆர்.பி. கும்பலைப் போலவே, அதையும் விஞ்சும் வகையில் தாது மணற் கொள்ளையன் வைகுண்டராஜன் கும்பலின் ஆட்சி கேள்வி முறையின்றித் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தனி மாவட்டமாகப் பிரிக்கப்படாமல் நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியும் இருந்தபோது மாவட்ட ஆட்சியராக இருந்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான சுந்தரம், வைகுண்டராஜனுக்குப் போட்டியாக கார்னெட் மணல் அள்ளும் தொழிலில் உள்ள தயாதேவதாஸ் என்பவரது நிறுவனத்தில் ஆலோசகராகப் பணியாற்றுகிறார். வைகுண்டராஜனின் கொள்ளைக்கு அரசு அதிகாரிகளே உடந்தையாக இருப்பதைப் பற்றியும், சட்ட விரோதமாக அள்ளப்பட்டுள்ள கனிம வளமிக்க மணலின் மதிப்பு உத்தேசமாக ரூ. 96,120 கோடிகளாக இருக்கும் என்றும் கடந்த ஜனவரி 2013-இல் தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். தொழில் போட்டியின் காரணமாக வைகுண்டராஜனின் கொள்ளையையும் மோசடிகளையும் அவர் அம்பலப்படுத்தியுள்ள போதிலும், அவரது குற்றச்சாட்டுகள் மறுக்க முடியாதவை. மேலும், சமூக ஆர்வலர்களும் இப்பகுதிவாழ் மீனவர்களும் வைகுண்டராஜனின் சூறையாடலையும் அடாவடிகளையும் பற்றி அரசுக்குப் பல முறை புகார் கொடுத்துள்ளனர்.

இத்தகைய புகார்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டும் நோக்கத்தில் கண்துடைப்பு விசாரணை, ஆய்வு நடத்துவதென்பது வழக்கமான அதிகார வர்க்கச் சடங்கு. அதன்படியே, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக இருந்த அஷிஸ் குமார் கடந்த ஆகஸ்ட் 6-ஆம் தேதி வேம்பார் பகுதியில் ஆய்வு செய்ய அதிகாரிகளை அனுப்பியதோடு, அரசுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு குறித்த கணக்கீட்டிற்கு உத்தரவிட்டதும் அடுத்தநாளே அவர் பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட ஆட்சியர் திடீரென மாற்றப்பட்ட விவகாரம், தனது ஆட்சியின் மீதான அதிருப்தியாக மாறிவிடாதிருக்க, தாது மணற்கொள்ளை குறித்து விசாரிக்க ஐ.ஏ.எஸ். அதிகாரி ககன்தீப் சிங் பேடி தலைமையில் சிறப்புக் குழுவை அமைத்துத் தன்னை யோக்கியவானாகக் காட்டிக் கொள்கிறது ஜெயா கும்பல். ஆனால், வைகுண்டராஜனுக்குத் திட்டம் போட்டுக் கொடுத்துக் கொள்ளையடிக்கக் கற்றுக் கொடுத்தவர்களே இத்தகைய அதிகார வர்க்கக் கூட்டம்தான். கடந்த பல ஆண்டுகளாக இந்த ஊழல் கொள்ளையின் பங்காளிகளாக இருந்த அதிகார வர்க்கத்தைக் கொண்டே இப்போது ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்கப் போவதாக நாடகமாடுகிறது ஜெயா கும்பல். ஜெயலலிதா அமைத்துள்ள அதிகாரிகளின் சிறப்புக் குழுவைப் பற்றி எழுதிய கருணா



தாது மணற்கொள்ளையால் நாசமாகிக் வெடித்துக் கிடக்கும் நிலம்.

நிதி, ''அந்தக் குழுவுக்குத் தலைவராக வைகுண்டராஜன் என்பவரை நியமிக்கலாம் என்று நம்முடைய ஆபீஸ் பையன் சிபாரிசு செய்கிறான்'' என்று எள்ளி நகையாடுகிறார். இருப்பினும், ''ஜெயா கண் சிவந்தார், அ.தி.மு.க.வினர் உடந்தையாக இருப்பதை அறிந்ததும் அதிர்ந்தார்'' என்று ஏதோ ஜெயலலிதாவுக்குத் தெரியாமல் தாது மணற்கொள்ளை நடந்திருப்பதைப் போலவும், அவர் கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளதைப் போலவும் பார்ப்பன ஊடகங்கள் பரபரப்பூட்டுகின்றன.

தனியார்மயம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே அரசிடம் குறிப்பிட்ட இடத்தில் தாதுமணல் அள்ள உரிமம் பெற்றுக் கொண்டு, அதைக்காட்டியே வைகுண்டராஜனின் நிறுவனம் பல இடங்களில் சட்ட விரோதமாகத் தாதுமணலைச் சூறையாடி வந்தது. மறுபுறம், 2002-ஆம் ஆண்டிலேயே அன்றைய ஜெயா அரசாங்கத்துக்கும் டாடா நிறுவனத்துக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியிருந்தது. அதன்படி சாத்தான்குளம், திசையன்விளை முதலான செந்நிற மணல் மிகுந்த தேரிக்காடுகளில் என்னென்ன அரிய உலோகங்கள் உள்ளன என்பதற்கான சோதனைகளை செய்து முடித்திருந்த டாடா நிறுவனம், தேரிக்காட்டில் கிடைக்கும் இல்மனைட் மணலைப் பிரித்தெடுத்து டைட்டானியம் டை ஆக்சைடு தயாரித்து, அதிலிருந்து டைட்டானியம் உலோகத்தை உற்பத்தி செய்யும் ஆலை தொடங்குவதற்கான அனுமதிக்கு விண்ணப்பித்து காத்திருந்தது. ஆண்டுக்கு 2 லட்சம் டன் இல்மனைட் தாதுவைப் பிரித்து 50 ஆயிரம் டன் தாதுவை டைட்டானியம் டை ஆக்சைடு தயாரிக்கப் பயன்படுத்திவிட்டு, மீதி 1.5 லட்சம் டன் தாதுவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய டாடா தீர்மானித்தது. ஆனால், ஜெயா கும்பலுக்கும் டாடா நிறுவனத்துக்குமிடையே திரைமறைவு பேரங்களில் உடன்பாடு ஏற்படாததால் இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. நாட்டின் அரிய கனிமங்கள் டாடா நிறுவனத்தின் மூலம் வெளிநாடு செல்வதைத் தடுக்க இத்திட்டம் கைவிடப்பட்டது என்று அறிவித்தார், அப்போதைய அமைச்சரான நயினார் நாகேந்திரன். வைகுண்டராஜன் கும்பலோ வழக்கம்போலவே தனது சூறையாடலைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

பின்னர் மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடந்து தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், மீண்டும் டாடாவுடன் ஒரு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் 2007 ஜூன் மாதத்தில் போடப்பட்டது. இதன்படி, தாது மணல் நிறைந்த 10,500 ஏக்கர் நிலத்தை அரசே கையகப்படுத்தி டாடா நிறுவனத்துக்கு வழங்குவதென்றும், நிலம் வழங்கியவர்களுக்கு டாடாவின் டைட்டானியம் ஆலையில் வேலை கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கெதிராக, தென்மாவட்ட கடலோரப் பகுதிவாழ் மக்களின் விவசாய நிலங்களைப் பறித்து டாடாவுக்குத் தாரைவார்க்கும் திட்டம்தான் இது என்று ஜெயா கும்பலும் அதன் கூட்டணிக் கட்சிகளும் வைகுண்டராஜன் வகையறாக்களும் போராட்டங்களை நடத்தத் தொடங்கின. இதனால், மக்களின் கருத்தறிந்த பின்னரே ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்று தி.மு.க. அரசு பின்வாங்கியது. டாடா நிறுவனமும் இத்திட்டத்திலிருந்து விலகிக் கொண்டது. வைகுண்டராஜன் கும்பலோ கேள்வி

## அரிய வகை கனிமங்களின் பயன்பாடுகள்

கார்னெட் என்பது கனசதுர உருவில் உள்ள உறுதியும் பளபளப்புமிக்க கனிமம். உறுதியான தரை அமைப்பதற்கும், கண்ணாடி - சலவைக்கல் முதலானவற்றைத் துண்டிப்பதற்கும், பளிங்குக் கற்களைப் பாலீஷ் செய்வதற்கும்,மோதிரம் முதலான அணிகலன்களில் முத்துக்களாகப் பதிக்கவும் கார்னெட் பயன்படுகிறது.

இல்மனைட் என்பது அரிதாகக் கிடைக்கும் கனிமம். பெயிண்ட், பிளாஸ்டிக் ஆலைகளிலும், உலைகளின் உள் கட்டமைப்பு, விளையாட்டு, மருந்து பொருட்கள் தயாரிப்பு ஆலைகளிலும் பயன்படுகின்றது.

ரூட்டைல் என்ற கனிமம் இலேசானதாக இருப்பினும் வைரத்தைவிட உறுதியானது. பெயிண்ட், பிளாஸ்டிக், அதிக உறுதி தேவைப்படும் கட்டுமானங்களில்வெல்டிங் செய்வதற்கான வெல்டிங் ராடுகள் தயாரிக்க, விண்வெளி உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் முதலானவற்றில் இது அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

சிர்கான் என்பது கண்ணாடி போன்ற தோற்றம் கொண்ட உறுதியான கனிமம். வெப்பத்தைத் தாங்கும் திறன் கொண்டது. இதன் உறுதித் தன்மை காரணமாக பீங்கான் தரை ஓடுகள், பீங்கான் தட்டுகள் - கோப்பைகள் தயாரிப்பிலும் , உருக்கு - வார்ப்பு தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

முறையின்றி சூறையாடலைத் தொடர்ந்தது. ''கார்னெட் கனிமத்தைத் திருட்டுத்தனமாக எடுத்து, சட்டவிரோதமாக நாட்டு நலனுக்கு எதிராகக் கடத்தி விற்பனை செய்து கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கும் ஒரு 'தாதா'வுடன் ஜெயலலிதா செய்து கொண்ட ஒப்பந்தமே, இத்திட்டத்தை ஜெயலலிதா எதிர்ப்பதற்குக் காரணம்'' என்று வெளிப்படையாக அறிக்கை வெளியிட்டார் அன்று முதல்வராக இருந்த கருணாநிதி. ஆனாலும் அந்த தாதாவைக் கைது செய்து தண்டிக்கவோ, தாதுமணற்கொள்ளையைத் தடுத்து நிறுத்தவோ அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



தாது மணற்கொள்ளை மாஃபியா தலைவன் வைகுண்டராஜன்: 'அம்மா'வின் ஆதரவோடு தொழில் நடத்தும் மண்ணாதி மன்னன்.

இவ்வளவுக்கும் பின்னர், கார்னெட் மணல் கொள்ளை பற்றி இப்போதுதான் தெரிய வந்துள்ளதைப் போல ஜெயா அரசு ஆய்வுக்குழுவை அமைத்து சோதனை நடத்துவதே அயோக்கியத்தனமானது. இன்று நேற்றல்ல, பத்தாண்டுகளுக்கும் மேலாகவே இப்பகற்கொள்ளைப் பற்றி பல்வேறு தரப்பினரும் அரசிடம் முறையிட்டுள்ள போதிலும், தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல நிறுவனங்கள் அனுமதிக்காகக் காத்திருக்கும் போது, வைகுண்டராஜனின் வி.வி. மினரல்ஸ் நிறுவனத்துக்கு 72 நாட்களில் அனுமதி தரப்பட்டுள்ள முறைகேட்டையும், அந்நிறுவனத்தின் சட்டவிரோதச் செயல்பாடுகளையும் அம்பலப்படுத்தும் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியான சுந்தரம், வைகுண்டராஜனை ''மணல் மாஃபியா'' என்று வெளிப்படையாகச் சாடுவதோடு, அவரது அரசியல் சார்புதான் அவரைச் சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாக்கிறது என்றும் குற்றம் சாட்டுகிறார். பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தின் முன்னாள் இயக்குனரான டாக்டர் சி.எஸ்.பி. அய்யர் என்பவர், ''இந்திய கனிம வளக் கழகம் மற்றும் அணுசக்தித் துறை உயரதிகாரிகள் இத்தகைய தனியார் நிறுவனங்களின் ஆலோசகர்களாக இருப்பதோடு, அரசாங்கம் தரும் சம்பளத்தைவிடப் பத்து மடங்கு அதிகமான சம்பளத்தை இந்நிறுவனங்களிடமிருந்து பெறுகிறார்கள்'' என்கிறார்.

இப்பூமியிலுள்ள கனிம வளங்கள் அரசுக்கு - அதாவது சமுதாயத்துக்குச் சொந்தமானது என்பது நேற்று வரை இருந்த பொது நியதி. ஆனால் அரியவகைக் கனிமங்கள் குறித்த விதிகள், தனியார்மயமாக்கலுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டன. கனிம வளமிக்க பகுதிகளை விலைக்கு வாங்கியோ, குத்தகைக்கு எடுத்தோ கார்னெட் மணலைப் பிரித்தெடுத்து ஏற்றுமதி செய்வது தனியார்மயத்தின் கீழ் சட்டபூர்வ நடவடிக்கையாக அங்கீகரிக்கப்பட்டது. ஏற்கெனவே சட்டவிரோதமாக தாதுமணற் கொள்ளையில் ஈடுபட்டு வந்த வைகுண்ட ராஜன் கும்பல், இதைச் சாதகமாக்கிக் கொண்டு இச்சூறையாடலைப் பல மடங்கு விரிவாக்கியுள்ளதோடு, திடீர் பணக்கார கிரிமினல் மாஃபியாவாக வளர்ந்து கொட்டமடிக்கிறது.

வைகுண்டராஜனின் நிறுவனம் தூத்துக்குடி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி தாது மணலை அள்ளியுள்ளதா? அனுமதிக்கப்பட்ட ஆழத்தைவிட அதிகமாக அள்ளப்பட்டுள்ளதா? முறைகேடுகள் நடந்துள்ளதா - என்பதுதான் இப்போது நடக்கும் ஆய்வும் விசாரணையும். அனுமதி பெறாத இடத்தில் நடந்துள்ள சூறையாடல்களைப் பற்றியோ, சட்டவிரோத கடத்தல் பற்றியோ, எவ்வித விசாரணையுமில்லை.

குறிப்பாக நெல்லை மாவட்டத்தில்தான் வைகுண்டராஜன் கும்பல் மிகப் பெரிய சூறையாடலை நடத்தியுள்ளது. ஆனாலும் நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களில் நடந்துவரும் சூறையாடலைப் பற்றி எந்த விசாரணையும் இல்லை.

இருப்பினும், தூத்துக்குடியில் இந்த சிறப்பு ஆய்வுக்குழு கறாராக விசாரணை நடத்துவதாகவும், பல பகுதிகளில் திடீரென ஆய்வு நடத்துவதாகவும் ஊடகங்கள் பரபரப்பூட்டுகின்றன. கார்னெட் மணல் உள்ளிட்டு, பல லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள நாட்டின் பொதுச் சொத்துக்களை ஏன் தனியாரிடம் கொடுக்க வேண்டும் என்ற மையமான கேள்வியை விட்டுவிட்டு, அதில் அம்பலமாகும் ஊழல் - முறைகேடுகளை மட்டும் பெரிதாக்கிக் காட்டியும், அரசு நடவடிக்கை எடுப்பதாகப் பரபரப்பூட்டியும் மக்களைத் திசைதிருப்பும் பணியைத்தான் ஊடகங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

கர்நாடகத்தில் ரெட்டி சகோதரர்கள் எனும் மாஃபியா கும்பல் இரும்புக் கனிமங்களைச் சூறையாடியதைப் போலவே, மதுரையில் மலைக்கள்ளன் பி.ஆர். பி. கும்பல் கிரானைட் கொள்ளையை நடத்தியதைப் போலவே, மண்ணாதி மன்னன் வைகுண்டராஜன் கும்பல் தாதுமணற் கொள்ளையை நடத்தி வந்துள்ளது. பொதுச்சொத்தான கனிம வளங்களையும் பொதுத்துறை நிறுவனங்களையும் இத்தகைய மாஃபியாக்களின் - கார்ப்பரேட் முதலாளிகளின் தனிச்சொத்தாக மாற்றும் தனியார்மயக் கொள்கைதான் இத்தகைய ஊழல்கள் அனைத்துக்கும் அடிப்படை.

தனியார்மயம் என்பதே ஊழல்மயம்தான். ஊழலற்ற தனியார்மயம் என்பதே இல்லை. இந்த உண்மையை மக்கள் புரிந்துகொண்டு போராடுவதன் மூலமே வைகுண்டராஜன் வகையறாக்களையும், இக்கிரிமினல் மாஃபியாக்களின் கூட்டாளிகளான ஆட்சியாளர்களையும் தண்டிக்க முடியும்; தனியார்மயக் கொள்ளையைத் தடுத்து நிறுத்திடவும் முடியும்.

● மனோகரன்

# எதிர்கொள்வோம்!

**இணையத்தின் மூலமாகவும் நேரடியாகவும் எமது தோழர்களிடம் எழுப்பப்படும் கேள்விகள், வைக்கப்படும் விமர்சனங்களைத் தொகுத்து அவற்றுக்குத் தக்க பதிலளிக்கும் பகுதி.**

“ஈழமும் தேசிய இனப் பிரச்சினையும்” என்ற பெயரில் சமரன் வெளியீட்டகம் ஒரு –ல் பதிப்பித்திருக்கிறது. அதில் ஈழம், விடுதலைப் புலிகள் தொடர்பான ம.க.இ.க.வினர் நிலைப்பாடுகள் மீது பல விமர்சனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆதாரபூர்வமான அந்–லுக்கு ஏன் இன்னமும் பதிலளிக்கவில்லை? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

*அந்நூல் இலங்கை மற்றும் ஈழத்தைப் பற்றிய உண்மை விவரங்களைக் கொண்டதே அல்ல என்பதற்குச் சில சான்றுகளைக் கடந்த இதழில் எழுதியிருந்தோம். அதன் தொடர்ச்சியாக சமரன் குழுவின் மேலும் சில பொய்மைகளை இங்கே எடுத்துக்காட்ட விழைகிறோம்.*

*‘இலங்கையைக் காலனியாக்கிக் கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அடக்குமுறை ஆதிக்கத்தோடு சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையிலான வேறுபாடுகளைப் பயன்படுத்தி, முரண்பாட்டை வளர்த்து, அவர்கள் ஐக்கியப்படாமல் இருக்கவும் அவர்களால் புகுத்தப்பட்ட பாராளுமன்ற முறைகளையும்கூட இரு இனங்களுக்கு இடையில் பூசல்களை ஏற்படுத்தவே திட்டமிட்டு செயல்படுத்தினர். அரசு உத்தியோகங்களில் பாரம்பரியத் தமிழர்களைச் சேர்ந்த உயர்குடியினருக்கு அதிக இடங்களைத் தந்தும் இன்னும் பிற சில்லறைச் சலுகைகளை வழங்கியும் தமிழ், சிங்கள மக்கட்களுக் கிடையே ஒரு அவநம்பிக்கையை ஏற்படுத்தி இனப்பகையை வளர்க்க முயன்றார்கள்.*

*‘காலனிய இலங்கையின் பொருளாதாரம் ஏகாதிபத்தியவாதிகளிடம் இருப்பினும் ஏற்றுமதி, இறக்குமதி மொத்த வர்த்தகத்தில் இந்தியப் பெருவணிகர்கள் ஆதிக்கம் வகித்தனர்; இவர்களின் ஆதிக்கத்தை சிங்கள சிறு வணிகத்தினரால் உடைத்தெறிந்து முன்னேற முடியவில்லை. சிறு வியாபாரத் துறையில் தமிழர்களுடன் தமிழ்பேசும் முஸ்லீம் மதத்தவர்களும் போட்டியிட வேண்டியிருந்தது. தமிழக நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் பிரத்தியேகமான ஆதிக்கத்திற்குள்தான் இலங்கையின் வட்டித்தொழில் இருந்தது. இந் நிலைமைகள் யாவும் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் மீது, அதிலும் குறிப்பாக இந்திய வம்சாவழியினர் மீது சிங்களவர் அவநம்பிக்கை கொள்வதற்கான அடிப்படையாக அமைந்தன.’ (பக். 37, 38) என்கிறது, சமரன் குழு.*

*‘நாட்டு விடுதலைக்கான போராட்டத்தில் சிங்களவர் மத்தியில் இரண்டு போக்குகள் தோன்றின. இன, மத வேறுபாடுகளைக் கடந்த ஒரு நாடு தழுவிய இயக்கம் என ஒன்றும்; இலங்கை சிங்களருக்கே, தமிழர்களை அதற்கு அந்நியமாகக் கருதும் இரண்டாம் போக்கு எழுந்து வளர்ந்தது. இலங்கையின் இரு இனங்களுக்கிடையில் பூசல்கள் இருந்தாலும் விடுதலைக்காக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் இரு இனமக்களும் ஒன்றுபட்டார்கள். இதன் விளைவாகவும் சர்வதேச சூழ்நிலைமைகளின் மாற்றங்கள் காரணமாகவும் காலனிய ஆட்சி தொடர முடியவில்லை. ஏகாதிபத்தியம் இலங்கையின் இரு இனங்களையும் பலாத்காரமாக இணைத்து அரசு அதிகாரத்தை சிங்கள-தமிழினத் தரகு முதலாளிகளிடம் மாற்றிக் கொடுத்தது. பின்னர் படிப்படியாக அதைச் சிங்களப் பேரினவாதத் தரகு முதலாளிகள் அபகரித்துக் கொண்டனர்’ என்கிறது, சமரன் குழு.*

*காலனி, ஏகாதிபத்தியவாதிகள் என்றால் அடக்குமுறைகள், விடுதலைப் போராட்டங்கள், அவற்றில் வெவ்வேறு பிரிவுகள், போக்குகள், முரண்பாடுகள், மோதல்கள், ஆட்சியாளர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிகள், ஆட்சியில் நீடிக்க முடியாத நிலை, தரகு முதலாளிகளிடம் அதிகார மாற்றம் — இந்தப் பொதுச் சூத்திரத்தை இலங்கைக்கு அப்படியே பொருத்தி சொந்த வரலாற்றுக் கதை ஒன்றை சமரன் குழு தயாரித்திருக்கிறது.*

*இங்கே இலங்கையின் காலனிய கால வரலாறு என்ற பெயரில் ஒரு பக்கச் சாய்வாக சமரன் குழு வரலாற்றைத் திரிப்பது சற்றுக் கவனித்தாலே புரிகிறது. இலங்கையின் காலனிய காலத்திலும் சரி, பிறகும் சரி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஓரே இனமாக அமையவும் இல்லை. இலங்கை வாழ் முஸ்லீம் மக்கள் அனைவரும் தமிழ் பேசுபவர்கள்*

மதுவிலக்கு இயக்கத்தைத் தொடங்கி சிங்கள - பௌத்த பேரினவாத மறுமலர்ச்சிக்கு முயற்சித்த அநாகரிக தர்மபாலா. (கோப்புப் படம்)



என்றும் அவர்கள் உள்ளிட்ட இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இலங்கையின் காலனிய காலத்திலேயே, ஒரே தொகுப்பாக, ஒரே இனமாக இருந்ததைப் போலவும் இந்த இனத்துக்கும் சிங்களருக்கும் இருந்த முரண்பாட்டை காலனியவாதிகள் வளர்த்து பிரித்தாளும் சூழ்ச்சியால் அவர்களை ஐக்கியப்படவிடாமல் செய்து இலங்கையின் இரு இனங்களையும் பலாத்காரமாக காலனியவாதிகள் இணைத்தனர் என்றும் சமரன் குழு எழுதுகிறது.

முதலாவதாக, உலகின் மற்ற பிற நாடுகளில் நடந்ததைப்போல இலங்கையில் குறிப்பிடத்தக்க காலனிய விடுதலைப் போராட்டங்கள் நடைபெறவில்லை என்பதுதான் உண்மை! 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேலைநாடுகளில் தோன்றிய கிறித்துவ மதுவிலக்கு இயக்கத்தின் நீட்டிப்பாக இலங்கையில் மதுவிலக்கு இயக்கத்தைத் தொடங்கி சிங்கள-பௌத்த மறுமலர்ச்சிக்கு முயன்றார் அநாகரிக தர்மபாலா. பிரிட்டிஷ் காலனியவாதிகளின் எடுபிடிகளும் சிங்களத் தரகு முதலாளிய மேட்டுக் குடியினருமான சேனநாயகா, பண்டாரநாயகா கும்பல் அநாகரிக தர்மபாலாவை மதுவிலக்கு இயக்கத்தின் தலைமையிலிருந்து தூக்கியடித்தது; பிறகு நாட்டை விட்டே துரத்தியடித்தது.

சிங்கள-பௌத்த மேட்டுக் குடியினரும் யாழ்ப்பாணத் தமிழ் வேளாள சாதி மேட்டுக் குடியினரும் இலங்கை காலனிய அரசின் நிர்வாக அமைப்பில் இடம் பிடித்துக் கொண்டு இங்கிலாந்து முடியரசுக்கு ஒன்றுபட்டு சேவை செய்தனர். இவர்கள் சிங்கள-தமிழ் சமூகங்களின் பெயரால் ஒன்றுபட்டு, அதுவும் யாழ்ப்பாணச் சீமான்கள் தலைமையில் 1919-இல் அனைத்து இலங்கை தேசியக் காங்கிரசு கட்சியை நிறுவினர். அது இந்தியாவின் காந்தி, காங்கிரசின் அளவுக்குக்கூட காலனிய விடுதலை அடையாளப் போராட்டங்களை நடத்தவில்லை; முழு விடுதலைக்கு மாறாக, காலனிய ஆட்சியின் கீழ் சுயாட்சி அரசமைப்புகளைக் கோரிப் பெற்றனர். காலனியவாதிகள் நிறுவிய நாடாளுமன்றத்திலும் அதிகார மாற்றத்துக்குப் பின்னர் அமைந்த ஆட்சி அமைப்பிலும் சேர்ந்தே பங்கேற்றனர்.

15-ஆம் நூற்றாண்டில் வணிகர்களாக அரபு நாடுகளிலிருந்து வந்து இலங்கையில் குடியேறிய அரபுவழி ''ஆர்வி'' பேசும் மூர்களின் சந்ததியினர். (கோப்புப் படம்)




**மூன்று வெவ்வேறு மொழி, வரலாறு, மரபுகளைக் கொண்ட மத, மொழிச் சிறுபான்மையினர்கள், இலங்கை வாழ் முஸ்லீம் மக்கள். இவர்களில் தமிழ் பேசும் இசுலாமியர்களை விடப் பிற மொழி பேசுபவர்களே அதிகமானோர். ஆகவே, இலங்கை வாழ் முஸ்லீம் மக்கள் அனைவரும் தமிழ் பேசும் முஸ்லீம் என்று சமரன் குழு கூறுவது உண்மையல்ல.**

1930-களில் காலனியவாதிகளிடம் இருந்து சுதந்திரம் மற்றும் நீதி கோருவதென இலங்கையின் பல பகுதிகளில் இளைஞர் அணிக் குழுக்கள் தோன்றின. ஆனால், அவை எதுவும் உண்மையில் விடுதலைக்கான பாரிய இயக்கங்கள் எதையும் கட்டியெழுப்பவில்லை. அவற்றில் முன்னோடியான யாழ்ப்பாண இளைஞர் அணி காந்தி-காங்கிரசுடன் உறவு கொண்டு சமரச வழிமேற் கொண்டது. தென்னிலங்கையில் தொடங்கிய இளைஞர் அணிக் குழுக்கள் அநாகரிக தர்மபாலா பாணியிலான சிங்கள-பௌத்த மத, இனவாத இயக்கங்களாகவே இருந்தன.

தென்னிலங்கை இளைஞர் அணிக் குழுக்கள் மத்தியில் இருந்து மேலைக் கல்வி பயின்ற 'இடதுசாரி' லங்க சம சமாஜக் கட்சி என்ற போலி சோசலிச, போலிக் கம்யூனிசக் கட்சியைத் தோற்றுவித்து, ஆங்கிலேயர்களின் பெருந்தோட்ட முதலாளிகளுக்கு எதிராக நடேச அய்யர் தலைமையிலான மலையகத் தொழிலாளர் சங்கத்துடன் சேர்ந்து தொழிற்சங்கப் போராட்டங்கள் நடத்தினர். இந்தியப்போலி சோசலிசக் கட்சித் தலைவர்களை அழைத்துக் கூட்டங்கள் நடத்தினர்.

'டெலோ'' என்ற தனிப் போராளிக் குழு தோன்றுவதற்கு முன்னோடியாக, 1960-களின் பிற்பகுதியில் முற்போக்கு தமிழ் மாணவர்கள் அமைப்பை உருவாக்கிய குட்டிமணி, தங்கதுரை.



**காலனி, ஏகாதிபத்தியவாதிகள் என்றால் அடக்குமுறைகள், விடுதலைப் போராட்டங்கள், அவற்றில் வெவ்வேறு பிரிவுகள், போக்குகள், முரண்பாடுகள், மோதல்கள், ஆட்சியாளர் களின் பிரித்தாளும் சூழ்ச்சிகள், ஆட்சியில் நீடிக்க முடியாத நிலை, தரகு முதலாளிகளிடம் அதிகார மாற்றம் — இந்தப் பொதுச் சூத் திரத்தை இலங்கைக்கு அப்படியே பொருத்தி சொந்த வரலாற்றுக் கதை ஒன்றை சமரன் குழு தயாரித்திருக்கிறது.**

இதற்கிடையே, இரண்டாம் உலகப்போர் வெடித்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஜெர் மனி, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து, அதிகாரத்தைக் கைப்பற்ற இலங்கை ஆளும் தரகு முதலாளிகள் முயன்றனர். அதற்காக ஜெயவர்த் தனே, சேனநாயகே இருவரும் ஜப்பானுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். போரில் ஜப்பானும், ஜெர் மனியும் தோற்றுப்போகவே அந்த முயற்சி நிறை வேறாமல் போனாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பலவீன மடைந்ததாலும் அமெரிக்க நிர்பந்தம் மற்றும் இந்தியாவில் அச்சமயம் நடந்த தன்னெழுச்சியான போராட்டங்கள் காரணமாக இலங்கையில் அதிகார மாற்றம் நடந்தது. அப்போதும் கூட்டாகவேதான் சிங்கள - தமிழ் தரகு முதலாளிகளிடம் அதிகாரம் மாற்றித் தரப்பட்டது. அதன்பிறகு சிங்கள தரகு முதலாளிகள் படிப்படியாக இலங்கையின் அதிகாரத்தை ஏகபோக மாக்கிக் கொண்டிருந்தபோதும் தமிழ் தரகு முதலாளிகள் அவர்களின் ஆட்சியில் பங்கேற்று வந்தனர்.

இலங்கையின் காலனிய விடுதலை இயக்க வரலாறு என்றால் அது அநாகரிக தர்மபாலாவின் சிங்கள-பௌத்த பேரினவாத பாரம்பரியம், மரபைச் சேர்ந்த ஊனமுற்ற விடுதலைப் போராட்ட வரலாறுதான் என்ற உண்மையைக் காண மறுக்கிறது, சமரன் குழு.

போரா, பார்சி, மெமோன் ஆகிய இந்தியப் பெரு வணிக முதலாளி நிறுவனங்களின் ஆதிக்கம், நாட்டுக் கோட்டைச்செட்டியார்களின் வட்டித் தொழில் ஆதிக்கம் காரணமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மீது ஏன் சிங்கள மக்கள் 'அவநம்பிக்கை' கொள்ள வேண்டும்? இது குறித்து "இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள்" நிலை என்ன? இம்மக்கள் அவ்வாதிக்கங்களை ஏன் எதிர்க்கவில்லை? மேலும், கிறித்தவத் தொண்டு நிறுவனங்களின் பலனாய் பெருமளவு கல்வி பயின்ற ஈழ நடுத்தர வர்க்கத்தினர் காலனிய காலத்திலிருந்தே உயர் கல்வியிலும் அரசு நிர்வாகத்திலும் தமது மக்கட் தொகைக்கு மிகவும் மேலான விகிதத்துக்கு, அதாவது 60 விழுக்காடிற்கு மேல் பிடித்துக் கொண்டிருந்ததோடு அவர்களில் பலரும் காலனிய ஆட்சியாளர்களுக்கு விசு வாசமாக இருந்தனர். சிங்கள மக்கள் இதைத் தமது வேலை வாய்ப்புகளை மறுப்பதாகவும் ஈழத்தமிழர் ஆதிக்கமாகவும் பார்த்தனர்.

இலங்கை வாழ் முஸ்லீம் மக்கள் உள்ளிட்ட இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இலங்கையின் காலனிய காலத்தி லேயே, ஒரே தொகுப்பாக, ஒரே இனமாக, ஒரே தேசமாக இருந்தா கவும் இந்தத் தமிழீழத் தேசத்தை யும் சிங்கள தேசத்தையும் பிரித்தா ளும் சூழ்ச்சி செய்து பலாத்கார மாக காலனியவாதிகள் இணைத்த தாகவும் சமரன் குழு கூறுவது உண் மையல்ல. இலங்கை வாழ் முஸ் லீம் மக்கள் அனைவரும் தமிழ் பேசுபவர்களும் அல்ல. அரபு நாடுகளில் இருந்து குடியேறிய அரபு வழி "ஆர்வி" பேசும் மூர்கள், இந்தோனேசியாவின் ஜாவா மற்றும் மலேசியாவிலிருந்து குடியேறிய "மலாய்" பேசும் முசு லீம்கள், இந்தியாவிலிருந்து குடியேறிய தமிழ் பேசும் இசுலாமியர்கள் என்று மூன்று வெவ்வேறு மொழி, வர லாறு, மரபுகளைக் கொண்ட மத, மொழிச் சிறுபான்மை யினர்கள், இலங்கை வாழ் முஸ்லீம் மக்கள். இவர்களில் தமிழ் பேசும் இசுலாமியர்களை விடப் பிற மொழி பேசு பவர்களே அதிகமானோர். ஆகவே, இலங்கை வாழ் முஸ் லீம் மக்கள் அனைவரும் தமிழ் பேசும் முஸ்லீம் என்று சமரன் குழு கூறுவதும் உண்மையல்ல.

இவ்வாறு பொதுவில் இலங்கையின் வரலாற்றை மட்டுமல்ல, குறிப்பாக ஈழம் மற்றும் ஈழப் போராளி களின் வரலாற்றையும் சமரன் குழு திரித்துப் புரட்டு கிறது. மூர், மலாய், தமிழ் முஸ்லீம் மக்கள், மலையகத் தமிழர்கள், ஈழத் தமிழர்கள் ஆகிய அனைவரையும் பல இடங்களில், "இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள்" என்று பொதுவில் எழுதும் சமரன் குழு, சில இடங்களில் மலையகத் தமிழர்களையும், ஈழத் தமிழர்களையும் பிரித்தும் அடையாளப்படுத்துகிறது. "இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினை" (பக். xi, 41, 47) என்று எழுதும்போது சமரன் குழு உண்மை யில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை குறித்துத் தெளிவின்றிக் குழம்பிப் போயுள்ளதுதான் தெரிகிறது.

'த.வி.கூ.வின் காட்டிக் கொடுத்தல்களால் அதிருப்தியுற்றுத் தனிநாடுக்காக ஆயுதப்போராட்டம் தொடங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் பல குழுக்

## பிழை திருத்தம்

ஆகஸ்ட் 2013 புதிய ஜனநாயகம் இதழின் 32-ஆம் பக் கத்தில் உள்ள படக்குறிப்பானது, "1983 ஜூலையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள இனவெறியர்களால் நடத் தப்பட்ட படுகொலை மற்றும் கலவரத்தின் பொழுது எரிக் கப்பட்டுச் சிதைக்கப்பட்ட யாழ் நூலகம்" என்று தவறாக அச்சாகியுள்ளது. இதனை, "1981 ஜூன் முதல் நாளில் சிங்கள இனவெறியர்களால் எரிக்கப்பட்டுச் சிதைக்கப் பட்ட யாழ் நூலகம்" என்று திருத்தி வாசிக்குமாறு கோருகி றோம். எமது கவனக்குறைவால் நேர்ந்துவிட்ட இத்தவ றுக்கு மிகவும் வருந்துகிறோம்.

-ஆசிரியர் குழு

களாகப் பிரிந்தனர். அதில் பின்வரும் குழுக்கள் குறிப்பிடத் தக்கவை. 1). தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (பிரபாகரன் குழு). 2) தமிழ் ஈழ மக்கள் விடுதலை அமைப்பு (முகுந்தன் குழு). 3). தமிழ் ஈழ விடுதலை முன்னணி (ஈழவேந்தன் குழு). 4). ஈழ மாணவர் பொது மன்றம் (பத்மநாபன்) இன்னும் பிற' (பக்.46).

பிரபாகரனையும் புலிகளையும் எல்லாவற்றுக்கும் மூல முதன்மையாக்கும் சமரன் குழுவின் இக்கருத்து ஈழத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு குறித்த அதன் அறியாமையை உறுதிப்படுத்துகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி அமைக்கப்படுவதற்கு முன்னரே இளையதம்பி இரத்தினசபாபதி, நேசதுரை திருநேசன் (சங்கர் ராஜி), பாலநடராஜா அய்யர் ஆகியோரால் 1975-இல் இலண்டனில் உருவானது, ஈழ மாணவர் பொது மன்றம் (EROS). மட்டக்களப்பு, அம்பாறை, யாழ் குடாநாட்டைச் சேர்ந்தவர்களை, குறிப்பாக இசுலாமியரை ஈர்த்தது. பாலஸ்தீன விடுதலை அமைப்பைத் தொடர்பு கொண்டு ஆயுதப் பயிற்சி முகாம்களை ஏற்பாடு செய்தது. TELO., PLOTE., EPRLF., ஆகிய வற்றின் போராளிகளுக்கு பாலஸ்தீன விடுதலை அமைப்பின் முகாம்களில் பயிற்சிபெற ஏற்பாடு செய்தனர்.

EROS - இன் மாணவர் அணியாகிய ஈழம் மாணவர்கள் பொதுச் சங்கத்திலிருந்து ஒரு பிரிவினர் வெளியேறி 1980-இல் EPRLF என்ற தனிப் போராளிக் குழுவை நிறுவினர்.

தங்கதுரை, குட்டிமணி ஆகியோரால் 1960 - களின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட முற்போக்கு தமிழ் மாணவர்கள் அமைப்பிலிருந்து தனிப் போராளிக் குழுவாக 1979 - இல் தோன்றியதுதான் TELO.

மேலும், ஈழவேந்தன் தலைமையிலான குழு TELO - தமிழ் ஈழ விடுதலை முன்னணி என்பதும், பத்மநாபன் தலைமையிலான குழு EROS - ஈழ மாணவர் பொது மன்றம் என்பதும் சமரன் குழுவின் வழக்கமான கற்பனைக் கண்டுபிடிப்புதான்!

(தொடரும்)



அகமதாபாத்திலுள்ள ஒரு காப்பகத்தில் வைத்துப் 'பராமரிக்கப்படும்' வாடகைத் தாய்மார்கள்.

# வாடகைக் கருப்பைகள்: உலகிலேயே முதலிடம் மோடியின் குஜராத்துக்கு!

இருபத்து நான்கு மணி நேரமும், தடையில்லா மின்சாரம், மாநிலம் முழுவதும் தண்ணீர் விநியோகம், அபரிமிதமான விவசாய வளர்ச்சி, வந்து குவியும் அந்நிய முதலீடுகள், அவை உருவாக்கும் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் என மோடியின் குஜராத் குறித்து பொய்யான தொரு பிம்பம் உருவாக்கப்படுகின்றது. இவற்றுக்கு மத்தியில் குஜராத் குறித்த உண்மைச் செய்திகளும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. அம்மாநில அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படியே கடந்த 12 ஆண்டுகளில் மட்டும் குஜராத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 39.06% அதிகரித்துள்ளது. கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியில் தமிழ்நாடு, ஆந்திராவிற்குப் பின்னால் இந்தியாவிலேயே 11வது இடத்தில் குஜராத் இருக்கிறது.

ஆனால் வேறொரு விசயத்தில் உலகிலேயே முதலிடத்தைக் கைப்பற்றியிருக்கிறது குஜராத். பணத்திற்காகத்தாய்மையை விற்கும் பரிதாபத்துக்குரிய வாடகைத் தாய்களின் எண்ணிக்கையில் உலகளவில் குஜராத்துக்குத்தான் முதலிடம்.

கடந்த காலங்களில் 'வெண்மைப் புரட்சி'யின் அடையாளமாக, அமுல் நிறுவனத்தின் பிறப்பிடமாக, அறியப்பட்ட ஆனந்த் நகரம் இன்று, வாடகைத்தாய் முறையின் மையமாகி விட்டது. ஆண்டுக்கு 30,000 குழந்தைகளையும் உற்பத்தி செய்து, ஆயிரம் கோடி ருபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் இந்தத் துறையின், தலைநகரம் என்று சொல்லும் அளவிற்கு கருத்தரிப்பு மையங்கள் இந்நகரம் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. ஆனந்த் நகரம் மட்டுமன்றி, குஜராத்தின் அகமதாபாத், ஜாம்நகர், சூரத் என மற்ற நகரங்களிலும் இத்தொழில் கொடிகட்டிப் பறக்கிறது.

இன்விட்ரோ கருத்தரிப்பு முறை (IVF) என்ற அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, சோதனைக் குழாய்

குழந்தையை உருவாக்கியது. அதே முறையில் கணவனின் விந்தணுவையும், மனைவியின் கருமுட்டையையும் இணைத்து சோதனைக் குழாயில் உருவாக்கப்படும் கருவை தனது கருப்பையில் சுமந்து, குழந்தையாகப் பெற்றுத் தரும் பெண்ணைத்தான் வாடகைத் தாய் என்கிறார்கள். பிறக்கும் குழந்தை தனது தாய் தந்தையின் மரபணுக்களைத்தான் கொண்டிருக்கும் என்பதும், அது பத்து மாதம் சுமந்த வாடகைத்தாயின் சாயலைக் கூடக் கொண்டிருக்காது என்பதும் தான் இந்த வாடகைத்தாய் முறை பிரபலமடைவதற்கு காரணம். இதனால்தான் வசதி படைத்த இந்தியர்கள் மட்டுமின்றி, வெளிநாட்டு தம்பதியரும், பிள்ளைப்பேறுக்காகத் தேடி வரும் புனிதத் தலமாகியிருக்கிறது மோடியின் குஜராத்.



வாடகைத்தாய் வியாபாரத்தை,எவ்வித உறுத்தலுமின்றி நடத்திவரும் குஜராத்தைச் சேர்ந்த மருத்துவ வியாபாரி நாய்னா படேல்.

குழந்தைப் பேறு இல்லாத அமெரிக்க, ஐரோப்பியத் தம்பதிகள் தங்களது நாட்டில் இதுபோன்று குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் மிக அதிகமாகச் செலவாகும். பல நாடுகளில் வாடகைத்தாய் முறையும் வாடகைத் தாய்க்குப் பணம் கொடுப்பதும்தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் ஆகும் செலவில் ஒரு சிறுபகுதியைக் கொண்டே குஜராத்தில் வாடகைத் தாய்களை அமர்த்திக் கொள்ள முடியும். இதனால் வாடகைத் தாய்களைத் தேடி வரும் வெளிநாட்டுத் தம்பதிகளின்எண்ணிக்கை நாளுக்கு நாள்அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

குறிப்பிட்ட பாலினத்தில் குழந்தை வேண்டும் எனக் கேட்கும் தம்பதிகளுக்காக வாடகைத் தாய்மார்கள் அத்தகைய குழந்தை உருவாகும் வரை மீண்டும் மீண்டும் கருத்தரிப்புச் சிகிச்சைக்கு உட்பட வேண்டும். குழந்தைப்பேறு காலம் முழுவதும் இந்த வாடகைத் தாய்மார்கள், குடும்பத்தைப் பிரிந்து மருத்துவமனை ஏற்பாடு செய்து தரும் கொட்டடியில் அடைந்துகிடக்க வேண்டும். குழந்தை பிறந்த பின், தாய்மையின் ஹார்மோன் மாற்றங்கள், ஏற்படுத்தும் உணர்ச்சிகளை எதிர்கொண்டு, குழந்தையுடனான பிணைப்பை அறுத்தெறிந்து, குழந்தையை ஒப்படைத்து விலகிவிட வேண்டும்.

இவ்வளவு துன்பங்களை எதிர்கொண்ட பிறகும் அவர்களுக்குப் பேசிய பணம் கிடைப்பதில்லை. வாடகைத்தாய் முறையில் குழந்தைபெறச் செலவாகும் மொத்த தொகையில் வெறும் 2% மட்டுமே வாடகைத் தாயாக வரும் பெண்ணிற்குக் கொடுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் 2முதல் 3 லட்சம் வரை தருவதாகக் கூறினாலும், குழந்தைப்பேறுக் காலத்தில் அந்தப் பெண்ணைப் பராமரிக்கும் செலவுகள் அனைத்தையும் அவளது பங்கிலிருந்தே கழித்துக்கொண்டு இறுதியில் 12,000 முதல் 15,000 வரை கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். அதையும் கூட பல தவணைகளில் தருவதால் படிப்பறிவற்ற பல பெண்களுக்குத்தாங்கள் ஏமாற்றப்பட்டது கூடத் தெரிவதில்லை.

குஜராத்தின் இளம் பெண்கள், வாடகைத்தாயாக 2 முதல் 5 முறை வரை குழந்தை பெற்றுக் கொள்கின்றனர். இதில் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களும், அபாயங்களும் ஏராளம். அறுவை சிகிச்சைதான் சுலபமானது, குழந்தைக்கு பாதுகாப்பானது என்பதால் எந்த வாடகைத் தாயும் இயற்கையாக பிரசவிக்க அனுமதிக்கப் படுவதில்லை. இதன் காரணமாக ஆரோக்கியமான பெண்களே இரண்டு குழந்தை பெற்றபின் நோயாளியாகி விடுகின்றனர். ஊட்டச்சத்துக்குறைவு, இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் நிலைமையோ ஆபத்தானது.

குஜராத்தைச் சேர்ந்த வாடகைத்தாய் மூலம் இரட்டைக் குழந்தைகளைப் ''பெற்றுள்ள'' வெளிநாட்டுப் பெண் அட்ரீனீ ஆரிஃப்.



குழந்தைகளைப் படிக்கவைப்பதற்காக, கடன்களை அடைப்பதற்காக, கணவனின் மருத்துவச்செலவிற்காக எனத் தங்களது குடும்பத்தின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கே குஜராத் பெண்கள் தங்களது கருப்பையை வாடகைக்குவிட வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

பத்தாண்டுகளில் குஜராத்தை பன்னாட்டு மூலதனத்தின் கருப்பையாக மாற்றியிருக்கும் மோடி, தனது மாநிலத்துப் பெண்களின் கருப்பையை அமெரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் வாடகைக்குவிட்டு அந்நியச் செலாவணி ஈட்டுவதில் அதிசயமில்லைதான்.

● கதிர்

# தெலுங்கானா ஆதரவும் எதிர்ப்பும்:

# ஆளும் வர்க்கப் பிரிவுகளுக்கிடையே பொறுக்கித் தின்பதில் போட்டா போட்டி!

**ஆட்சியதிகாரத்திலும் அரசு சன்மானக் கொள்ளையிலும் பங்குகோரி அரசியல் பிழைப்புவாதிகளும் ஆதிக்க வர்க்கங்களும் நடத்தும் போட்டிக்கு, உழைக்கும் மக்கள் பலிகடாவாக்கப்பட்டிருக்கின்றனர்.**

இந்தியாவின் 29-வது மாநிலமாக தெலுங்கானா என்ற புதிய மாநிலம் உருவாக்கப்படுவதை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு உறுதி செய்துள்ளது. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து பிரிக்கப்படும் தெலுங்கானா மாநிலமும், ஆந்திராவின் கடலோர கிழக்கு மாவட்டங்களும் தெற்கேயுள்ள ராயலசீமா மாவட்டங்களும் அடங்கிய எஞ்சிய பகுதியாகிய சீமாந்திரா எனப்படும் மாநிலமும் அடுத்த பத்தாண்டுகளுக்கு ஐதராபாத்தை பொதுத்தலைநகரமாகக் கொண்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர கிழக்கு மாவட்டங்கள், ராயலசீமா, தெலுங்கானா - என மூன்று பெரும் பிராந்தியங்களைக் கொண்டதுதான் ஆந்திரப் பிரதேசம். இதில் தெலுங்கானா பிராந்தியம் ஒப்பீட்டளவில் பெரியது. முன்பு நிஜாம் சமஸ்தானமாக இருந்த காரணத்தால் தெலுங்கானாவில் பேசப்படும் தெலுங்கில் உருது கலப்பு அதிகமாக உள்ளது. கம்யூனிஸ்டுகள் தலைமையிலான மாபெரும் தெலுங்கானா பேரெழுச்சியைத் தொடர்ந்து, போலி சுதந்திரத்துக்குப் பின்னர் கடுமையான அடக்குமுறைக்குப் பிறகு தெலுங்கானா இந்தியாவுடன் கட்டாயமாக இணைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஆந்திராவின் பிற பகுதிகளைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தாலும், கல்வி, வேலைவாய்ப்பு, அரசாங்கப் பதவிகளில் ஆந்திராவின் பிற பகுதிகளைச் சேர்ந்தோர் பெரும்பான்மையாக இருப்பதாலும், தெலுங்கானா பிராந்தியத்தின் ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் மற்றும் மேட்டுக்குடி வர்க்கத்தினர் தனி மாநிலக் கோரிக்கையை இப்பிரச்சினைக்குத் தீர்வாக வைத்துப் போராடி வந்தனர். குறிப்பாக 1969 - இல் தெலுங்கானா தனிமாநிலக் கோரிக்கைக்கான போராட்டம் தீவிரமடைந்து, ஏறத்தாழ 300 பேர் கொல்லப்பட்டு கடும் அடக்குமுறைக்குப் பின்னர் அப்போராட்டம் படிப்படியாக நீர்த்துப் போனது.

பின்னர், தனியார்மய - தாராளமயத்தைத் தொடர்ந்து தெலுங்கானா பிராந்தியத்தில் கருங்கல் குவாரி, நிலக்கரி, சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள், வீட்டுமனைத் தொழில், தகவல் தொழில்நுட்பத்துறை, சினிமாதுறை, காடுகள் முதலானவற்றில் சூறையாடலுக்கான புதிய வாய்ப்புகள் திறந்து விடப்பட்டதும், ஆந்திராவின் பிற பகுதிகளைச் சேர்ந்த ஆளும் வர்க்கப் பிரிவுக்கும் தெலுங்கானாவின் ஆளும் வர்க்கப் பிரிவுக்குமிடையிலான போட்டா போட்டியின் காரணமாக மீண்டும் தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கைக்கான போராட்டம் 2010-ஆம் ஆண்டில் தீவிரமடையத் தொடங்கியது. அதற்கெதிராக தெலுங்கானாவைப் பிரிக்கக் கூடாது என்று ஆந்திராவின் இதர பகுதிகளில் போராட்டங்கள் நடந்தன. பின்னர் காங்கிரசு கூட்டணி அரசு தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டதோடு, 2014-க்குள் நிறைவேற்றுவதாகவும் வாக்குறுதியளித்தது.

அதன்படியே இப்போது தெலுங்கானா என்ற புதிய மாநிலம் உருவாக்கப்படுவதை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு உறுதி செய்துள்ளது. பெரிய மாநிலங்களை உடைத்துச் சிறிய மாநிலங்களாக உருவாக்குவதை பா.ஜ.க. ஏற்பதால், தெலுங்கானா தனி மாநிலப் பிரிவினையை ஆதரிக்கிறது. ஜெகன் மோகன் ரெட்டி

தனித் தெலுங்கானாவுக்காகப் பற்றியெரிந்த போராட்டம்: அரசு சன்மானங்களைப் பங்கு போடுவதற்கான போட்டாபோட்டியில் இறக்கிவிடப்படும் மக்கள். (கோப்புப்படம்)



யின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரசு கட்சியோ இப்பிரிவினையை எதிர்க்கிறது. தெலுங்கானா பிராந்தியத்திலுள்ள காங்கிரசு கட்சியினர் தனி மாநிலப் பிரிவினையை ஆதரிக்கும் அதேசமயம், சீமாந்திரா பிராந்தியத்தின் காங்கிரசு மற்றும் தெலுங்கு தேசக் கட்சியினர் இப்பிரிவினையை எதிர்த்து போராட்டங்களை நடத்துகின்றனர். வலது கம்யூனிஸ்ட் கட்சி தனித் தெலுங்கானாவை ஆதரிக்கும் அதேசமயம், மார்க்சிஸ்ட் கட்சியோ பிரிவினையை எதிர்க்கிறது.



தெலுங்கானா தனி மாநிலமாகப் பிரிக்கப்படுவதை எதிர்த்து, கடலோர ஆந்திரம் மற்றும் ராயலசீமாவைச் சேர்ந்த தலைமைச் செயலக அரசு ஊழியர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

தனி மாநில அறிவிப்பைத் தொடர்ந்து, கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதி நீரில் கூடுதல் பங்கு கோருவதோடு, கடலோர ஆந்திரம் மற்றும் ராயலசீமாவில் பிறந்து தற்போது ஐதராபாத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் அனைவரும் தெலுங்கானா தனி மாநிலம் உருவான பிறகு வெளியேறிவிட வேண்டுமென்று எச்சரிக்கிறார், தெலுங்கானா ராஷ்டிர சமிதியின் தலைவரான சந்திரசேகர் ராவ். அவரது அறிவிப்பை எதிர்த்து, கடலோர ஆந்திரம் மற்றும் ராயலசீமாவின் அரசு அலுவலர்கள் போராட்டங்களில் இறங்கி தெலுங்கானா தனி மாநிலமாகப் பிரிக்கப்படுவதை எதிர்க்கின்றனர். இதனால் இப்பகுதிகளில் அரசு அலுவலகங்களும் பள்ளி-கல்லூரிகளும் சாலை போக்குவரத்தும் முற்றாக முடங்கிப் போயுள்ளன.

வளர்ச்சித் திட்டங்களில் புறக்கணிக்கப்படுவதாகவும், பின்தங்கிய நிலையில் இருத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், தெலுங்கானா பிராந்தியத்தை இத்தனை காலமும் சீமாந்திரா பிராந்தியத்தினர் ஒடுக்கிச் சுரண்டியதாகவும் தெலுங்கானா தலைவர்கள் நியாயவாதம் பேசுகின்றனர். ஆனால் தெலுங்கானா பிராந்தியத்தில் வீட்டு மனை, கல் குவாரிகள், கனிமச் சுரங்கங்கள், காட்டுவளம் முதலானவற்றைச் சூறையாடி ஆதிக்கம் செலுத்தும் புதுப்பணக்கார மாஃபியாக்களுக்கு எதிராக இத்தலைவர்கள் மக்களைத் திரட்டி இதுவரை எந்தப் போராட்டத்தையும் நடத்தியதேயில்லை.

தெலுங்கானாவைப் போலவே கோர்க்காலாந்து, போடோலாந்து தனி மாநிலக் கோரிக்கைகள் நீண்டகாலமாக எழுப்பப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே உத்திரப் பிரதேசத்தை நான்கு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டுமென்று அம்மாநிலச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அசாமிலுள்ள கர்பி மக்கள் தாங்கள் செறிவாக நிறைந்துள்ள அங்லாங் மாவட்டத்தைத் தனி மாநிலமாக்க வேண்டுமென்கின்றனர். மகாராஷ்டிராவில் விதர்பா, குஜராத்தில் சௌராஷ்டிரா, கர்நாடகத்தில் கூர்க், ஒடிசாவில் கோஷலாஞ்சல், பீகாரில் மிதிலாஞ்சல் - என தனி மாநிலக் கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன.

தனியார்மய - தாராளமயமாக்கத்தைத் தொடர்ந்து சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், நான்குவழிச் சாலைகள், மேம்பாலங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், புதுப்பணக்கார மேட்டுக்குடியினர் - என ஒரு சில நகரப்புற பகுதிகள் மினுக்கின்றன. நாட்டின் சில பகுதிகளில் திடீர் ‘வளர்ச்சி’யையும், இதர பெரும்பாலான பகுதிகளின் பின்தங்கிய நிலையையும் மறுகாலனியாதிக்கம் மேலும் தீவிரப்படுத்தி வருகிறது. இதற்கான காரணத்தைப் பரிசீலிக்காமல், பிராந்திய ஏற்றத்தாழ்வை மட்டும் வைத்து தனி மாநிலக் கோரிக்கையை சந்திரசேகர ராவ் போன்ற ஆளும் வர்க்க அரசியல்வாதிகள் தூண்டுகின்றனர். பொதுச்சொத்துக்களைச் சூறையாடுவதிலும், அரசு சன்மானங்களைப் பங்கு போட்டுக் கொண்டு பொறுக்கித் தின்பதிலும் நடக்கும் போட்டாபோட்டியே தனி மாநிலக் கோரிக்கையாக வெளிப்படுகின்றன.

இந்த யதார்த்தத்தைக் காண மறுத்து, ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்பது பிராந்திய அடிப்படையிலோ அல்லது பழங்குடியினத்தின் தனித்த அடையாளமாகவோ எந்த வடிவிலும் வெளிப்படலாம் என்றும், இது அம்மக்களின் நியாயமான ஜனநாயக உரிமைக்கான கோரிக்கையாக உள்ளதால், இத்தகைய தனி மாநிலப் பிரிவினையை ஆதரிக்க வேண்டுமென்றும் சில முதலாளித்துவ அறிவுத்துறையினர் வாதிடுகின்றனர். இதன் மூலம் மக்களை மாயையில் மூழ்கடிக்கின்றனர்.

தெலுங்கு தேசிய இனத்தின் தாயகமான ஆந்திரப் பிரதேசத்தை இரண்டாகப் பிரிப்பது சரியல்ல என்றாலும், தனி மாநிலம் கோரி தெலுங்கானா மக்கள் நீண்டகால

மாகப் போராடி வந்துள்ளதால், மக்களின் உணர்வுகளை மதித்து அதனை ஆதரிக்க வேண்டும் என்றும், ஒரே தேசிய இனத்தின் மக்கள் பிராந்திய அடிப்படையில் தனித்தனி மாநிலங்களாகப் பிரிவது தவறானதல்ல என்றும் சில தமிழினவாதிகள் தனித் தெலுங்கானாவை ஆதரிக்கின்றனர். மறுபுறம், இதேபோல தமிழகத்தையும் பிரிக்க வேண்டுமென சில சாதிய அரசியல்வாதிகள் கோருவதை ஆதரிக்க முடியாது என்றும், ஏனெனில் இது மக்கள் கோரிக்கையல்ல என்றும் விளக்கமளிக்கின்றனர். எந்த ஒரு கோரிக்கையும் ஒரு வர்க்கத்தின், சாதியின், இனத்தின் அல்லது பிராந்தியத்தின் அரசியல் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டு, பின்னர்தான் அது மக்கள் கோரிக்கையாக உருமாற்றம் பெறுகிறது. அந்த கோரிக்கையின் தன்மை என்ன என்பதிலிருந்து சரி - தவறை பரிசீலிப்பதுதான் சரியான அணுகுமுறையாகும்.

ஆனால், தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கை என்பது பிராந்திய ஏற்றத்தாழ்வை வைத்து ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் ஆட்சியதிகாரத்தில் பங்கு கோரும் போட்டா போட்டிதானே அன்றி, இது மக்களுக்கான அரசியல் - பொருளாதார கோரிக்கைகளின் அடிப்படையிலான போராட்டமோ, முற்போக்கான ஜனநாயகக் கோரிக்கையோ அல்ல. ஆளும் வர்க்கப் பிரிவுகளிடையே பொதுச் சொத்தைச் சூறையாடவும், அரசாங்க சன்மானங்களைப் பொறுக்கித் தின்னவும் நடக்கும் போட்டா போட்டிக்காக தெலுங்கானா ஆதரவு - எதிர்ப்புப் போராட்டங்களில் மக்கள் இறக்கி விடப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும். நேற்று வரை பல்வேறு ஓட்டுக் கட்சி பதவிகளில் இருந்துவரும் பிழைப்புவாதிகளில் தெலுங்கானாவைச் சேர்ந்த ஒரு பிரிவினர்தான் இப்போராட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சிறிய மாநிலங்களாகப் பிரிப்பதால் மக்களின் வாழ்வில் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படும் என்பது மிகப் பெரிய மோசடி. இதற்கு ஜார்கண்டும், சட்டிஸ்கரும் எடுப்பான சான்றுகளாக உள்ளன. வளர்ச்சி என்ற பெயரில் உள்நாட்டு - வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளின் சூறையாடலும், மக்கள் மீது அறிவிக்கப்படாத இராணுவ ஆட்சியும்தான் அங்கு நீடிக்கிறது. இந்த உண்மைகளைக் காண மறுத்து தனி மாநிலக் கோரிக்கையைக் குருட்டுத்தனமாக ஆதரிப்பது அடிப்படையிலேயே தவறானதாகும்.

● குமார்

# டாஸ்மாக்கை மூடவைத்த மக்கள் போராட்டம்!



**வே**தாரண்யம் - கீழ் ஆறுமுகக்கட்டளைக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள டாஸ்மாக் சாராயக் கடையை அகற்றக் கோரி கடந்த 14.6.2013 அன்று வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் பகுதி வாழ் இளைஞர்களும் பெண்களும் வேதாரண்யம் - திருத்துறைப்பூண்டி சாலையில் மறியல் போராட்டத்தை நடத்தினர். இன்னும் இருபது நாட்களில் கடையை அப்புறப்படுத்துவதாக அப்போது எழுதிக் கொடுத்துச் சென்ற வட்டாட்சியர், அதன் பிறகும் கடையை அகற்றாமல் அலட்சியப்படுத்தினார். எனவே, டாஸ்மாக் கடையை இப்பகுதியிலிருந்து அகற்றும்வரை வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டுக் குடியேறுவோம் என்ற முழக்கத்துடன் வி.வி.மு. வேதாரண்ய வட்டாரப் பொறுப்பாளர் தோழர் தனியரசு தலைமையில் 8.8.2013 அன்று மேலவீதி பெரியார் சிலை அருகிலிருந்து முழக்கமிட்டபடியே பேரணியாகப் புறப்பட்ட பெண்களும் இளைஞர்களும், சட்டி, அடுப்பு, விறகு, துடப்பம், பாய் - என குடியேறத் தேவையான பொருட்களுடன் ஊர்வலமாக வந்து வட்டாட்சியர் அலுவலக வாயிலை மறித்து முற்றுகையிட்டனர். அங்கே அடுப்பைப் பற்றவைத்த பெண்கள் அனைவருக்கும் தேநீர் தயாரிக்கத் தயாரானதும், அதிகாரத் திமிரோடு பெண்களைத் தகாத வார்த்தைகளில் ஏசிய ஆய்வாளரை பெண்கள் சூழ்ந்து கொண்டு எதிர்க்கேள்விகள் எழுப்பி, லஞ்சம் வாங்கிப் பொறுக்கித் தின்னும் போலீசின் யோக்கியதை அம்பலப்படுத்தினர். வட்டாட்சியரை மக்கள் முன் விளக்கமளிக்க நிர்பந்தித்தனர். அவர் மூலம் டாஸ்மாக் வட்டார மேலாளரை வரவழைத்து, அவர் உடனடியாகக் கடையை மூடுவதற்கான வேலையைத் தொடங்கிய பின்னரே மக்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது. டாஸ்மாக் கடை வெளியேற்றப்பட்டதை உடனிருந்து கண்காணித்த மக்கள், போராட்டம் வெற்றியடைந்ததும் பட்டாசு வெடித்து மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

மக்களின் பிரச்சினைகளுக்காக உறுதியுடன் போராடுபவர்கள் புரட்சிகர அமைப்பினர்தான் என்பதை உணர்த்தியதோடு, எருமைத் தோல் அதிகார வர்க்கத்துக்கு எதிராக எப்படி போராட வேண்டுமென்பதைக் கற்றுக் கொடுப்பதாக அமைந்த இப்போராட்டம், இவ்வட்டாரமெங்கும் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

- பு.ஜ. செய்தியாளர், வேதாரண்யம்.

## வறுமைக் கோடு:

# வாய்க்கொழுப்பு வர்க்கத்தின் வக்கிர வியாக்கியானம்!

**ஒரு சராசரி இந்தியனுக்கு ஒரு நாளை ஓட்ட 35 ரூபாய் போதுமென்றால், அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஏன் பல்லாயிரக்கணக்கில் சம்பளமும் படிகளும் அளக்க வேண்டும்?**

“**ஏ**ழைகள் யார்?” என்ற கேள்விக்கு, நகைக்கத்தக்கதும், வக்கிரம் நிறைந்ததுமான வருமான வரையறையொன்றைப் புதிதாக அறிவித்திருக்கிறது, மைய அரசின் திட்ட கமிசன். இதன்படி, நாளொன்றுக்கு கிராமப்புறங்களில் ரூ.27.20-க்கு மேலும், நகர்ப்புறங்களில் ரூ.33.40-க்கு மேலும் தமது அத்தியாவசியத் தேவைகளுக்குச் செலவு செய்யக்கூடிய தனிநபர்களை ஏழைகளாகக் கருத முடியாது என வறுமைக் கோட்டை வரையறுத்து, நகர்ப்புறங்களில் ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்று செளக்கியமாக வாழ்வதற்கு மாதமொன்றுக்கு 5,000/- ரூபாயும், அதே எண்ணிக்கை கொண்ட குடும்பமொன்று கிராமப்புறத்தில் வாழ்வதற்கு மாதமொன்றுக்கு 4,080/- ரூபாயும் போதும் என்று தெரிவித்திருக்கிறது.

இங்கு அத்தியாவசியத் தேவைகள் எனக் குறிப்பிடப்படுவது ஒருநாள் உணவுக்கான செலவு மட்டுமல்ல; துணிமணிகள், கல்வி, மருத்துவம் மற்றும் செருப்பு உள்ளிட்ட நுகர்பொருட்களுக்கு ஆகும் செலவுகளையும் இந்த வருமானத்தை வைத்துக்கொண்டு சமாளித்துவிட முடியும் எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள், நமது பொருளாதாரப் புலிகள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த வறுமைக் கோட்டை (கிராமப்புறங்களில்) ரூ.25-, (நகர்ப்புறங்களில்) ரூ.32/- என நிர்ணயம் செய்திருந்த திட்டக் கமிசன், தற்பொழுது இரண்டு ரூபாயைக் கூட்டிப் போட்டு, புதிய வறுமைக் கோட்டை நிர்ணயித்திருக்கிறது. எனவே, திட்டக் கமிசனின் இந்த அறிவிப்பு புதிய மொந்தையில் பழைய கள்ளுதான்.

வறுமைக் கோட்டை நிர்ணயம் செய்த அதே கையோடு, கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது எனவும் தடாலடியாக அறிவித்திருக்கிறது, திட்டக் கமிசன். 2004-ஆம் ஆண்டில் 40 கோடியே 70 இலட்சமாக இருந்த ஏழைகளில் எண்ணிக்கை 2012-இல் 26 கோடியே 90 இலட்சமாகக் குறைந்துவிட்டதாகக் கணக்கு காட்டப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வானது மாதச் சம்பளம் வாங்கும் நடுத்தர வர்க்கத்தைக்கூடப் புலம்ப வைத்திருக்கும் நிலையில், கிராமப்புற விவசாயம் சீரழிந்துபோய் நடுத்தர வர்க்க விவசாயிகள்கூட வேலை தேடி நகரத்திற்கு அகதிகளாக ஓடிவரும் வேளையில், கடந்த 17 ஆண்டுகளில் 2,70,940 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டுபோயுள்ள சூழ்நிலையில், ஒருபுறம் வேலையில்லாத் திண்டாட்டமும், மறுபுறம் நவீனக் கொத்தடிமைத்தனமும் தலைவிரித்தாடும் சூழலில், இந்திய ரூபாயின் மதிப்பு செல்லாக்காசாகி வரும் நேரத்தில், எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த மூன்றாண்டுகளாக இந்தியப் பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கிக் கொண்டு மீண்டு வர முடியாமல் தவிப்பதாக ஆளுங்கும்பலே புலம்பி வரும் வேளையில், ஏழைகளின் எண்ணிக்கை பல கோடிக்கணக்கில் குறைந்துவிட்டதாகவும், ஒரு முப்பத்தைந்து ரூபாயில் ஒருநாள் பொழுதை ஓட்டிவிட முடியும் என்றும் சொல்லுவதற்கு காங்கிரசு கும்பல் கொஞ்சம்கூடக் கூச்சப்படவில்லை.




காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ராஜ் பப்பர், ரஷீத் மசூத் என்ற இரு கொழுப்பெடுத்த அறிவிலிகள், “மும்பையில் 12 ரூபாய்க்கும், டெல்லியில் 5 ரூபாய்க்கும் முழுச்சாப்பாடு கிடைப்பதாக”ப் புளுகித் திட்ட கமிசனின் வரையறுப்புக்குப் பட்டுக் குஞ்சம் கட்டினார்கள். ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வரும் உல்லாசப் பேர்வழியுமான ஃபரூக் அப்துல்லா, “நீங்கள்

நினைத்தால் ஒரு ரூபாயிலும் உங்கள் வயிற்றை நிரப் பிக் கொள்ளலாம்; நூறு ரூபாயிலும் நிரப்பிக் கொள்ள லாம்'' எனக் கூறி சமூக ஏற்றத்தாழ்வைக் குரூரமாக நியா யப்படுத்தினார்.

விலைவாசி உயர்வு என்பது ஒரு பிரச்சினையே யில்லை என்றுதான் காங்கிரசு கும்பல் கருதுகிறது. ''பதி னைந்து ரூபாய் கொடுத்து தண்ணீர் பாட்டில் வாங்குகிற வர்கள், இருபது ரூபாய் கொடுத்து ஐஸ்கிரீம் வாங்குகிற வர்கள் விலைவாசி உயர்வு குறித்துக் கத்தக்கூடாது'' எனத் திமிராகக் கூறியிருக்கிறார், ப.சிதம்பரம். பாட்டில் தண்ணீர் வாங்குகிறவர்களை விட்டுவிடுவோம். இன்று சென்னை உள்ளிட்டுப் பல்வேறு நகரங்களில் ஒரு குடம் தண்ணீரை ஐந்து ரூபாய்க்கும் ஆறு ரூபாய்க்கும் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு அடித்தட்டு மக்களைத் தள்ளி விட்டுள்ள ப.சி. வகையறாக்களுக்கு இவ்வளவு கொழுப்பு இருக்கக்கூடாது. குடிதண்ணீர் மட்டுமல்ல, கொத்தமல்லி - கறிவேப்பிலைகூட இன்று சும்மா கிடைப்பதில்லை என்பதையெல்லாம் கணக்கில் கொண்டா இந்த வறுமைக் கோடு நிர்ணயிக்கப் பட்டுள்ளது?

திட்டக்கமிசன் அறிவித்துள்ள வறுமைக் கோடு எதார் த்தத்துக்குப் பொருத்தமில்லாதது மட்டுமல்ல, அதுவொரு மோசடி என்பதை நமது அன்றாட வாழ்விலிருந்தே புரிந்து கொள்ளலாம். சென்னையில் சிமெண்ட் ஷீட் போட்ட ஒண்டுக்குடித்தன வீட்டைக்கூட 2,000 ரூபாய்க்குக் குறைவாக வாடகைக்கு எடுக்க முடியாது. தினந்தோறும் வேலைக்குச் சென்று திரும்ப பாக்கெட் டில் ஐம்பது ரூபாய்க்கும் குறைவாக இல்லாமல் ரோட்டில் காலடி எடுத்து வைக்க முடியாது. வீட்டு வாடகையும், போக்குவரத்துச் செலவும் வாங்கும் கூலி யில் ஐம்பது சதவீதத்தை விழுங்கிவிடும் அளவிற்குக் கிடுகிடுவென உயர்ந்துள்ளன. இவையிரண்டையும் நாம் விரும்பினால்கூடக் குறைத்துக் கொள்ள முடியாது. திடீரென ஏற்படும் மருத்துவச் செலவு, கல்யாணம், கருமாதி உள்ளிட்ட பிற செலவுகள் தனியானது.

விலைவாசிக்குத் தக்கபடி தொழிலாளர்களின் கூலியும் அதிகரிக்கவில்லையா என்ற வாதம் முன்வைக் கப்படுகிறது. ஆனால், கூலி ஒரு மடங்கு உயர்ந்தால் உணவுப் பொருட்கள், வீட்டு வாடகை, போக்குவரத்து, கல்வி, மருத்துவம் ஆகியவற்றுக்கு ஆகும் செலவுகள் பலமடங்கு உயர்ந்து, கைக்கும் வாய்க்கும் பத்தாத நிலையைத்தான் தோற்றுவித்துள்ளன. இந்திய மக்களின் உணவுப் பழக்கம் குறித்து சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள், மற்ற செலவுகளைச் சமாளிக்க உணவு உட்கொள்வதை அடித்தட்டு மக்கள் குறைத்துக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டியுள்ளன.

ஒரு காலத்தில் ரேஷன் அரிசி வாங்குவதைக் கவுரவக் குறைச்சலாக நினைத்தவர்கள்கூட, இன்று அதற்காக கியூ வில் நிற்கிறார்கள். அரிசிக்கு மட்டுமல்ல, பருப்புக்கும், சர்க்கரைக்கும், சமையல் எண்ணெய்க்கும் ரேஷன் கடையைத்தான் பல கோடி குடும்பங்கள் நம்பியுள்ளன. எவ்வளவுதான் வயிற்றைச் சுருக்கிக் கொண்டாலும், பல



> **மாறியுள்ள சூழ்நிலையில் இத்தாலி பீட்சா, அமெரிக்காவின் கே.எஃப்.சி. கோழிக் கறி, ஐ ஃபோன், ஐ பாட் என மேட்டுக்குடி யினரின் வாழ்க்கைத் தரத்தைப் பார்க்கும் ஆளும் வர்க்கம், கந்தல் ஆடை அணிந்து நெஞ்செலும்பு துருத்திக் கொண்டிருப்பவன் மட்டும்தான் ஏழை என்ற வழமையான பார்வையைத் தாண்டிச் செல்ல மறுக்கிறது.**

வேறு சமயங்களில் நிலைமையைச் சமாளிக்க வட்டிக்குக் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பது தான் உண்மை நிலவரமாக உள்ளது. ரேஷன் அட்டையை அடகு வைத்துக் கடன் வாங்குவது, சிறுநீர கத்தை விற்று வாழ்க்கையை ஓட்டுவது என அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரம், ஏழை என்று வழமையாகச் சொல்வதைவிட மிகவும் கீழான நிலைக்கு, கையறு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

1970-களில் வறுமைக் கோடை நிர்ணயிப்பதற்கு, கிராமப்புற மக்களுக்குத் தினந்தோறும் 2,400 கலோரி சத்தினை அளிக்கக்கூடிய உணவையும், நகர்ப்புற மக் களுக்கு 2,100 கலோரி சத்தினை அளிக்கக்கூடிய உண வையும் பெறுவதற்கு ஆகக்கூடிய செலவு அடிப்படை யாகக் கொள்ளப்பட்டது. ஆனால், தற்பொழுதோ வெறும் 1,700 கலோரி சத்தினை அளிக்கக்கூடிய உணவை வாங்குவதற்கு ஆகும் செலவுதான் அடிப்படை யாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. வறுமைக் கோட்டைக் குறைத்து நிர்ணயிக்க வேண்டும் என்பதற்காகவே உணவுத் தேவையைச் சுருக்கிக் காட்டியிருக்கிறார்கள். இது ஊட்டச்சத்து குறைபாட்டுக்கு அங்கீகாரம் அளிக்கும் மோசடி எனக் குற்றஞ்சுமத்துகிறார், ஜவ ஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் உத்சா பட்நாயக். அலுவாலியா கும்பலோ, இன்றுள்ள




ரேஷன் கடையில் அலைமோதும் ஏழைகளின் கூட்டமும், அமெரிக்க கோழிக்கறியை வெட்டும் புதுப்பணக்கார கும்பலும்: இந்தியாவின் இரு துருவங்கள்.

நிலைமைக்கு இந்தளவிற்கு உணவு உட்கொண்டாலே போதும் என ஆணவமாக நியாயப்படுத்துகிறது.

அடிமைச்சமூகத்தில்கூட, அடிமை உழைப்பதற்கும் உயிர் வாழ்வதற்கும் தேவையான உணவை வழங்குவதற்கான கடப்பாடு ஆண்டைக்கு இருந்ததெனக் கூறப்படுகிறது. ஆனால், நவீன முதலாளித்துவ எஜமானர்களோ அப்படிபட்ட தார்மீகப் பொறுப்பு எதையும் தாம் எடுத்துக் கொள்ள முடியாது எனத் திமிரோடு அறிவிக்கிறார்கள். இன்றுள்ள நிலைமையில் 1,700 கலோரி அளவுக்கு உணவு உட்கொண்டால் போதும் எனக் கூறும் திட்டக்கமிசன், வெகுவேகமாக மாறிக்கொண்டிருக்கும் மற்ற சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வறுமைக் கோடை நிர்ணயிப்பதில்லை. தீனி மட்டும் போட்டு மாட்டை வேலை வாங்குவது போல, உழைக்கும் மக்களுக்கு அளவுச் சோறு மட்டும் போதும் எனக் கருதுகிறார்கள். மாறிவரும் சூழலில், சோற்றைத் தாண்டி வேறு ஏதாவது அவனிடம் இருந்தால், தனது தொழில் மற்றும் குடும்பத் தேவைகள் கருதி செல்ஃபோன், இரு சக்கர வாகனம், தொலைக்காட்சிப் பெட்டி போன்ற சாதனங்களை வைத்திருந்தால், அதைக் காட்டியே அவனை ஏழை எனக் கருத முடியாது என முத்திரை குத்துகிறார்கள்.

மாறியுள்ள சூழ்நிலையில் இத்தாலி பீட்சா, அமெரிக்காவின் கே.எஃப்.சி. கோழிக்கறி, ஐஃபோன், ஐபாட் என மேட்டுக்குடியின் வாழ்க்கைத் தரத்தைப் பார்க்கும் இவர்கள், கந்தல் ஆடை அணிந்து நெஞ்செலும்பு துரித்துக் கொண்டிருப்பவன் மட்டும்தான் ஏழை என்ற வக்கிரமான பார்வையைத் தாண்டிச் செல்ல மறுக்கிறார்கள்.

வறுமைக் கோட்டை நிர்ணயிப்பதற்கான அளவுகோல்களை வகுத்துக் கொடுத்த சுரேஷ் டெண்டுல்கர் கமிட்டி பேருந்தைப் பயன்படுத்துகிறவனை ஏழையாகக் கருத வேண்டியதில்லை எனக் கூறியிருக்கிறது. 2012 -இல் நடத்தப்பட்ட தேசிய மாதிரிக் கணக்கெடுப்பில், இந்திய மக்கள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கு மேல் மருத்துவத்திற்குச் செலவு செய்வதில்லை எனத் தெரிய வந்ததாம். அதனால், மருத்துவத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறவர்களை ஏழையாகக் கருதத் தேவையில்லை எனக் கூறுகிறது, திட்டக் கமிசன். விற்கிற விலைவாசியில் ஒரு ரூபாயைக் கொண்டு தலைவலி மாத்திரையைக்கூட வாங்க முடியாது எனும்பொழுது, இந்த ஒரு ரூபாயைக் கொண்டு மருந்து மாத்திரை செலவுகளை மட்டுமல்ல, ஆஸ்பத்திரி செலவுகளையும் சமாளித்துவிட முடியும் என்கிறார்கள், நமது வல்லுநர்கள். எப்பேர்பட்ட குரூரம் இது.

தாங்கள், சர்வதேச அளவுகோலைப் பயன்படுத்தி ஏழைகள் எண்ணிக்கையைக் கணக்கிட்டிருப்பதாகப் பீற்றி வருகிறது, மன்மோகன் சிங் அரசு. பத்தாண்டுகளுக்கு முன்பு உலகிலிருந்து ஏழ்மையை ஒழிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு களமிறங்கிய ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் உலக வங்கியின் மேற்பார்வையில் தயாரித்து அளித்த அளவுகோல்தான் இந்த சர்வதேச அளவுகோல். கந்துவட்டிக்காரன் காருண்யத்தைப் பற்றி உபதேசிப்பதும் உலக வங்கி தலைமையில் ஏழ்மையை ஒழிக்கப் போவதாகக் கூறிகொள்வதும் ஒன்றுதான்.

ஏழைகள் யார்? எனக் கண்டுபிடிப்பதற்குத்தான் இந்த அளவுகோலை வைத்திருக்கிறோமே ஒழிய, அரசின் சமூக நல உதவிகளைப் பெறுவதற்கும் இந்தக் கணக்கிற்கும் எந்தவொரு சம்மந்தமும் கிடையாது எனத் தந்திரமாகக் கூறி வருகிறது, காங்கிரசு அரசு. இது உண்மையென்றால், வறுமைக் கோட்டை வரையறுக்க முன்னாள் ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரங்கராஜன் தலைமையில் இன்னொரு கமிட்டியை அமைக்க வேண்டிய அவசியமென்ன? சுரேஷ் டெண்டுல்கரை நல்லவர் என்று காட்டக்கூடிய அளவிற்குத் தனியார்மயத்திற்கும் மானியங்களை வெட்டுவதற்கும் ஆதரவானவர் இந்த ரங்கராஜன். ஒவ்வொரு பட்ஜெட்டிலும் சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் மானியங்கள் படிப்படியாக வெட்டப்படுகின்றன. இதற்கு ஒரு நிரந்தரமான நியாயம் கற்பிக்க வேண்டுமல்லவா? அதனால்தான் வறுமைக் கோட்டைக் குறைவாக நிர்ணயித்து, ஏழைகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டதாக நாடகமாடுகிறார்கள், காங்கிரசு கயவாளிகள்.

● திப்பு

# நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

**முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறிக் கலவரங்களையும் பாக்.எதிர்ப்பு இந்து தேசியவெறியையும் தூண்டிவிட்டு, நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க முனைகிறது, பா.ஜ.க.**

**நா**யைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அதனின் புத்தி மாறாது என்பார்கள். சங்கப் பரிவாரங்கள்-பா.ஜ.க. கும்பலுக்குக் கச்சிதமாகப் பொருந்தக்கூடிய சொலவடை இது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஓட்டுப் பொறுக்குவதற்காக, வளர்ச்சி மற்றும் ஊழலற்ற நல்லாட்சி என்பதை முன்னிறுத்தித் தன்னை ஒரு கண்ணியமிக்க கட்சியாகக் காட்டிவரும் அக்கும்பலின் உயிர்நாடி இந்து மதவெறி பயங்கரவாதம்தான் என்பது ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலுள்ள கிஷ்த்வர், பீகாரிலுள்ள நவாடா மற்றும் பெட்டையாவில் நடந்த மதக்கலவரங்களிலும்; விசுவ இந்து பரிசத் உ.பி.யில் நடத்த முயன்ற ‘‘84 கோசி பரிக்கிரமா’’ நிகழ்ச்சியிலும் அம்பலப்பட்டுப் போனது.



கிஷ்த்வரில் இந்து-முஸ்லிம்களுக்கு இடையே நடந்த மோதலின்பொழுது சூறையாடப்பட்ட கடைவீதி.

ஜம்மு பகுதியில் செனாப் நதிக் கரையோரம் அமைந்துள்ள கிஷ்த்வர் நகரில் ரம்ஜான் நாளன்று நடந்த இந்து-முசுலீம் மோதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்; இந்து பண்டிட்கள் மற்றும் முசுலீம்களுக்குச் சொந்தமான ஏராளமான கடைகள் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டன. இறந்து போனவர்களுள் ஒருவரான பஷீர் அகமது, இந்து மதவெறிக் கும்பலால் கொடூரமாகத் தாக்கப்பட்டு உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார். அரவிந்த் குமார் பகத் என்பவர் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்து போனரா அல்லது கிராமப் பாதுகாப்பு கமிட்டியால் சுட்டுக் கொல்லப்பட்டாரா என்பது இன்னும் சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது.

பா.ஜ.க.வைச் சாந்தப்படுத்துவதற்காக அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சஜ்ஜன் கிச்சலூ.



கிஷ்த்வர் மாவட்டத்தில் மட்டும் 3,287 ஆயுதந்தாங்கிய கிராமப் பாதுகாப்பு கமிட்டிகள் உள்ளன. மாவோயிஸ்டுகளை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டபூர்வ குண்டர்படையான சல்வாஜூடும் போல, இக்கிராம பாதுகாப்பு கமிட்டிகள் காஷ்மீருக்கு விடுதலை கோரும் அமைப்புகளை ஒழித்துக் கட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 3,174 கமிட்டிகள் இந்துக்களை மட்டுமே கொண்டு கட்டப்பட்டிருப்பதோடு, அவை சங்கப் பரிவார அமைப்புகளின் கிளை அமைப்புகளாகவே செயல்பட்டு வருகின்றன. கிஷ்த்வர் கலவரத்தின்பொழுது இந்த ஆயுதந்தாங்கிய குண்டர்கள் முசுலீம்களுக்கு எதிராக அட்டூழியங்களில் ஈடுபட்டிருப்பது ஆதாரங்களோடு அம்பலமாகியிருக்கிறது.

ரம்ஜான் தொழுகைக்காக 1,500-க்கும் அதிகமான முசுலீம்கள் சவ்கன் மைதானத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்த சமயத்தில், உள்ளூர் பா.ஜ.க. தலைவர் சுனில் சர்மாவின் பாதுகாவலர் ரத்தோர் உள்ளிட்ட சிலர் அந்த ஊர்வலத்தைக் கடந்து செல்ல வழிவிட வேண்டும் என அடாவடித்தனமாக நடந்துகொண்டதைத் தொடர்ந்து, இரு தரப்புக்குமிடையே வாக்குவாதம் முற்றிக் கலவரம் வெடித்ததாகக் குறிப்பிடுகிறது, இந்தியா டுடே இதழ். ‘‘இந்த வாக்குவாதத்தைத் தொடர்ந்து முசுலீம்கள் இந்துக் கடைகளின் மீது கற்களையும் பெட்ரோல் குண்டுகளையும் வீசித் தாக்கத் தொடங்க, இந்துக்கள் உடனடியாகப் பதிலடி கொடுத்தனர்’’ என்கிறார், பல்பீர்சிங் என்ற வர்த்தகர்.

கிஷ்த்வரில் இதற்கு முன்பும் மோசமான மதக் கலவரங்கள் நடந்துள்ளன. இந்த ரம்ஜான் சமயத்தில் ஒரு மோதல் வெடிக்கக்கூடும் என்ற அளவிற்கு கிஷ்த்

வரில் நிலைமை கொதிப்பாக இருந்தது. கலவரம் வெடிப்பதற்கு இந்த வாக்கு வாதம் ஒரு தீப்பொறியாகப் பயன்பட்டது என்பதுதான் உண்மை. இரண்டு தரப்புமே வன்முறையில் இறங்கின, இரண்டு தரப் புக்குமே பாதிப்புகள் ஏற்பட்டன என்ற போதும், இந்தக் கலவரத்தை அரசியல்ரீதி யில் பயன்படுத்திக் கொண்டு, அதன் பலனை அறுவடை செய்து கொள்ளும் முயற்சியில் பா.ஜ.க.தான் மும்மரமாகச் செயல்பட்டது.



உ.பி. அயோத்தியில் வி.இ.ப. நடத்த முயன்ற 84 கோசி பரிக்கிரமாவில் கலந்து கொள்ள வந்த இந்து மதவெறிக் கும்பல்: கூட்டம் குறைவு; கூச்சல் அதிகம்!

''தொழுகையை முடித்துக் கொண்டு திரும்பிய முசுலீம்கள் இந்தியாவுக்கு எதி ராக விடுதலை கோரும் முழக்கங்களை எழுப்பியதை அடுத்துதான் மோதல் வெடித்தது'' என இக்கலவரத்திற்குக் காரணம் கற்பித்த பா.ஜ.க., கலவரத் தில் இந்து மதவெறிக் குண்டர்களின் பங்கை, தேச விரோதிகளுக்கு எதிராகத் தேசபக்தர்கள் நடத்திய தாக்கு தலாகச் சித்தரித்தது. காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிராக வும், விடுதலை கோரியும் முழக்கங்கள் எழுப்பப்படுவது புதியதல்ல என்பதால், முதலாளித்துவப் பத்திரிகைகள் கூட பா.ஜ.க.வின் ''பில்டப்''பை நம்ப மறுத்தன. ஆனா லும் பா.ஜ.க. சற்றும் அசரவில்லை. கிஷ்த்வரில் நடந்த கலவரம் ஜம்முவிலேயே வேறு பகுதிகளுக்கோ, காஷ் மீர் பள்ளத்தாக்கிற்கோ பரவவில்லையென்றபோதும், ''இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து நேர்ந்திருப் பதாக'' நாடாளுமன்றத்தில் கூச்சல் போட்டார் பா.ஜ.க. எம்.பி.யான அருண் ஜேட்லி.

ஜம்மு-காஷ்மீர் மாநில உள்துறை துணை அமைச் சரும் கிஷ்த்வர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான சஜ்ஜத் கிச்சலூ கலவரம் நடந்த சமயத்தில் கிஷ்த்வரில் இருந்தார் என்ற ஒரே காரணத்தை வைத்து, அவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரியது பா.ஜ.க. கலவரத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய குற்றச்சாட்டில் சிக்கியிருந்த ஒமர் அப்துல்லா அரசு, கிச்சலூவைப் பலிகொடுத்து, பா.ஜ.க.வைச் சாந்தப்படுத்தியது. கலவரத்தைக் கட்டுப் படுத்தாமல் வேடிக்கை பார்த்த குற்றத்திற்கு கிச்சலூ வைப் பதவியிலிருந்து தூக்கியெறிவது நியாய மென்றால், குஜராத் முசுலீம் படுகொலையைத் திட்ட மிட்டு நடத்திவிட்டு, கொஞ்சம்கூட மனசாட்சி உறுத் தாமல் பதவியிலேயே ஒட்டிக் கொண்டிருக்கும் மோடிக்கு என்ன தண்டனை கொடுப்பது?

பீகார் மாநிலத்திலுள்ள பெட்டையாவில் இந்து மதவெறிக் கும்பல் நடத்திய ஊர்வலத்தில், முசுலீம்களை காங்கிரசின் ஓட்டு வங்கியாவும், அதனை மோடி கவனித்துக் கொண்டிருப்பதாகவும் நடிக்கப்பட்ட காட்சி.



கிஷ்த்வரில் நடந்த மதக் கலவரத்தை, ஏதோ நாட்டைக் காப்பாற்ற நடந்த போராட்டம் போலச் சித் தரித்த சங்கப் பரிவாரங்கள், பீகாரின் பெட்டையாவில் தமது அரசியல் நோக்கத்திற்காக நடத்திய ஊர்வலத்திற்கு மதச்சாயம் பூசின. அக்கும்பல் நாக பஞ்சமி தினத்தைச் சாக்காக வைத்து நடத்திய ஊர்வலத்தில் முசுலீம்களை காங்கிரசு மற்றும் நிதிஷ்குமாரின் ஓட்டு வங்கியாகச் சித் தரிக்கும் காட்சிகள் இடம் பெற்றிருந்ததுதான் கலவரம் வெடிப்பதற்குக் காரணமாக அமைந்தது. பீகாரின் மற் றொரு நகரான நவாடாவில் உணவு விடுதியொன்றை நடத்திவந்த யாதவ் ஒருவருக்கும் சில முசுலீம் இளை ஞர்களுக்கும் நடந்த தனிப்பட்ட வாக்குவாதம் பெரிது படுத்தப்பட்டு, இந்து யாத்ரீகர்கள் தாக்கப்படுவதாக வதந்தி பரப்பப்பட்டு, கலவரம் தூண்டிவிடப்பட்டது.

அயோத்தியில் தூசி படிந்து கிடக்கும் ராமர் கோவில் பிரச்சினையை மீண்டும் உசுப்பேற்றிவிடும் நோக்கத் தோடு 84 கோசி பரிக்கிரமாவைத் (பரிக்கிரமா என்பது ஒரு இடத்தில் தொடங்கி பல ஊர்களைச் சுற்றிவந்து அதே இடத்தில் முடிவடையும் யாத்திரை எனலாம்) தொடங்கி நடத்தப் போவதாக அறிவித்தது, விசுவ இந்து பரிசத். ஆனால், இந்த பரிக்கிரமா நிகழ்ச்சிக்கு உள்ளூர் அளவிலேயே ஆதரவு திரட்ட முடியாமல் போனதாலும், அயோத்தியில் இயங்கிவரும் பல்வேறு ஆகாராக்கள் (மடங்கள்) பாரம்பரியமாக நடத்தப்படும் பரிக்கிரமா ஏற் கெனவே நடந்து முடிந்து போனதைச் சுட்டிக்காட்டி வி.இ.ப.வின் நோக்கத்தை அம்பலப்படுத்திவிட்டதா லும் வி.இ.ப. அடக்கி வாசிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அறிவித்த நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டால் 'இந்து' கௌரவம் கப்பலேறிவிடும் என்ப தால், தனது திட்டம் பரிக்கிரமா இல்லையென்றும், அது சாதாரண யாத்திரைதான் என்று கூறி, குப்புற விழுந்தா லும் மீசையில் மண் ஒட்டவில்லை எனக் காட்டிக் கொண்டது, வி.இ.ப.

இந்த யாத்திரை அறிவிக்கப்பட்ட சமயத்தில்தான் வி.இ.ப. தலைவர் அசோக் சிங்கால் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் முலயம் சிங்கைச் சந்தித்தார். இச்சந்திப்பை சமாஜ்வாதிக் கட்சியால் நியாயப்படுத்த முடியாமல் போனதால், தனது சிறுபான்மையினக் காவலன் முகமூடியைக் காப்பாற்றிக் கொள்ள இந்த பரிக்கிரமா நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டது, அக்கட்சி. ‘‘வி.இ.ப. தலைவர்களுக்கு கைது வாரண்ட், அவர்கள் அயோத்தியில் நுழைவதற்குத் தடை’’ எனத் தடபுடலாக அறிவித்ததோடு, அசோக் சிங்கால், பிரவீண் தொகாடியா உள்ளிட்டுப் பலரைக் கைதும் செய்தது, உ.பி.அரசு. ஆனால், வி.இ.ப. தலைவர்கள் உப்புச்சப்பில்லாத குற்றப் பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டிருந்ததால், மறுநாளே அவர்கள் அனைவரும் விடுதலையாகிவிட்டனர். சுருக்கமாகச் சொன்னால் பரிக்கிரமா நிகழ்ச்சியும் சரி, அதற்கு எதிரான சமாஜ்வாதி அரசின் நடவடிக்கைகளும் சரி சொல்லிவைத்துக் கொண்டு அரங்கேற்றப்பட்ட நாடகம் போலவே நடந்து முடிந்தன.

பா.ஜ.க. மைய ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்றால், பீகார், உ.பி., உள்ளிட்ட இந்தி பேசும் மாநிலங்களில் கணிசமான தொகுதிகளை வெல்ல வேண்டும். உ.பி.யில் அக்கட்சி ஏற்கெனவே மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. பீகாரிலோ கூட்டணியிலிருந்து நிதிஷ்குமார் வெளியேறிப் போய்விட்டதால், பா.ஜ.க.வின் வெற்றிக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இம்மாநிலங்களில் எல்லாம் மோடியைக் காட்டி மட்டுமே ஓட்டுப் பொறுக்க முடியும் என்பதை பா.ஜ.க.வே நம்பவில்லை. ஊழல் எதிர்ப்பு, நல்லாட்சி என்று பேசி மக்களின் மனங்களை வெல்வதைவிட, இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு ஓட்டுப் பொறுக்குவதைத்தான் நம்பத்தகுந்த செயல்உத்தியாக பா.ஜ.க. கருதுகிறது. இந்து வெறியோடு, பாக்.எதிர்ப்பு மற்றும் சீன எதிர்ப்பு தேசிய வெறியையும் கலந்துகட்டி பிரச்சாரத்தை நடத்தினால், ஆட்சிக் கட்டிலைப் பிடித்துவிடலாம் எனக் கணக்குப் போட்டுக் காய்களை நகர்த்தி வருகிறது, பா.ஜ.க.

● குப்பன்

# ‘‘ஈழத்தமிழ் அகதிகள் மூவரையும் நாடு கடத்தாதே

## - புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

**செ**ந்தூரன், ஈழ நேரு, சவுந்திரராசன் ஆகிய மூன்று ஈழத்தமிழ் அகதிகளை உடனடியாக இலங்கைக்கு நாடு கடத்த மைய அரசு முடிவு செய்திருக்கிறது. சிறப்பு முகாம் என்ற சித்திரவதை முகாமில் அடைத்து ஈழ அகதிகளை வதைப்பதை எதிர்த்து இவர்கள் உண்ணாநிலைப் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதாலும், இதர ஈழ அகதிகளுக்கு உளவுத்துறையினர் இழைக்கும் கொடுமைகளை வெளிக்கொணர்கிறார்கள் என்பதும்தான் மத்திய-மாநில அரசுகளின் உளவுத்துறைகள் இவர்கள் மீது ஆத்திரமடையக் காரணமாகும். இவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைப்பது என்பது இவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு ஒப்பானதாகும். இது அகதிகளின் உரிமையை மீறும் கொடும் குற்றமாகும்.



இந்த அநீதியையும் உளவுத்துறையின் அடக்குமுறைகளையும் எதிர்த்து ம.க.இ.க; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள், தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து ‘‘ஈழத்தமிழ் அகதிகள் மூவரையும் நாடு கடத்தாதே! சிறப்பு முகாம்கள் எனப்படும் சிறைக்கூடங்களைக் கலைத்து அனைவரையும் விடுதலை செய்! ஈழத்தமிழ் அகதிகள் மீது தமிழக போலீசு இழைத்துவரும் துன்புறுத்தல்கள், பாலியல் அத்துமீறல்களுக்கு எதிராக விசாரணை நடத்தி தண்டனை கொடு! ஈழத்தமிழ் அகதிகள் அனைவருக்கும் இரட்டை குடியுரிமை வழங்கு!’’ என்ற முழக்கங்களுடன் 26.8.2013 அன்று திருச்சி ரயில்வே ஜங்சன் - காதிகிராப்ட் அருகிலும், 27.8.2013 அன்று சென்னை வள்ளுவர் கோட்டம் அருகிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.



திருச்சியில் உள்ள ஈழ அகதி முகாமில் வைக்கப்பட்டள்ள ஈழ நேருவை வழக்குரைஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என்ற முறையில் சந்திக்கக்கூட போலீசார் அனுமதி மறுப்பதை எதிர்த்து, மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தினர் ஆகஸ்டு 30 அன்று அகதி முகாமில் நுழைந்து திடீர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஈழத்தமிழ் அகதிகள் மூவரையும் நாடு கடத்துவதை எதிர்த்தும், ஈழத்தமிழ் அகதிகளின் விடுதலைக்கும் குடியுரிமைக்கும் போராட முன்வருமாறு உழைக்கும் மக்களை அறைகூவியும் நடந்துள்ள இப்போர்க்குணமிக்க ஆர்ப்பாட்டங்கள் மத்திய-மாநில அரசுகளின் உண்மை முகத்தைத் திரைகிழித்துக் காட்டுவதாக அமைந்தன.

- பு.ஜ.செய்தியாளர்கள்.

# இயற்கை எரிவாயு விலை அதிகரிப்பு:

# அம்பானி ஆட்சி!

# கோதாவரியே சாட்சி!!

**இயற்கை எரிவாயுவின் விலையை இரண்டு மடங்காக உயர்த்தியதன் மூலம் அம்பானிக்கு ஆண்டொன்றுக்கு 26,000 கோடி ரூபாயை மக்களிடமிருந்து பிடுங்கிக் கொடுக்கிறது மன்மோகன் அரசு.**

இந்தியாவில் பூமிக்கு அடியிலிருந்து எடுக்கப்படும் இயற்கை எரிவாயுவின் கொள்முதல் விலையை ஏப்ரல் 2014 முதல் இரண்டு மடங்கு உயர்த்தியிருக்கிறது மன்மோகன் அரசு. 4.2 டாலராக இருந்த ஒரு யூனிட் எரிவாயுவின் விலை, (ஒரு யூனிட் எனக் குறிப்பிடப்படுவது ஒரு மில்லியன் பிரிட்டிஷ் தெர்மல் யூனிட் (MMBTU)-இது எரிவாயுவை அளவிடும் அலகு) இனி 8.4 டாலர்.

ஒப்பீட்டளவில் மலிவான எரிபொருள் என்பதனால் இயற்கை எரிவாயு, மின்சார உற்பத்தி மற்றும் உர உற்பத்தி துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. மேற்கூறிய விலை உயர்வின் விளைவாக உரத்தின் விலை டன் ஒன்றுக்கு 6000 ரூபாய் அதிகரிக்கும். மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் அதிகரிக்கும். உரம் மற்றும் மின்சாரத்துறை அமைச்சகங்களின் கடுமையான எதிர்ப்புக்கு இடையிலும் இந்த விலையேற்றத்தை திணித்திருக்கிறது மன்மோகன் அரசு. விலையேற்றத்தினால் பாதிக்கப்படுபவர்கள் மக்கள் என்பது தெரிந்த விசயம். ஆதாயமடைவது யார்?

கிருஷ்ணா, கோதாவரிப் படுகையின் எண்ணெய் எரிவாயுக் கிணறுகளைத் தன்வசம் வைத்திருக்கும் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம், ஆண்டொன்றுக்கு 26,000 கோடி ரூபாய் கொள்ளை இலாபத்தை அறுவடை செய்வதற்காகத்தான் இந்தவிலை உயர்வு என்கிறார் மத்திய அரசின் முன்னாள் மின்சாரத் துறை செயலாளர் இ.ஏ.எஸ்.சர்மா.

யூனிட் ஒன்றுக்கு 8.4 டாலர் என்ற விலைகூட கட்டுப்படியாகாதென்றும், சர்வதேச சந்தை விலையான 14.2 டாலரைத் தங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் கோருகிறார் முகேஷ் அம்பானி. இது வடிகட்டிய பொய் என்பது ரிலையன்ஸ் நிறுவனத்தின் ஆவணங்கள் மூலமே இப்போது நிரூபணமாகியிருக்கிறது.

நிதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு, எண்ணெய் எரிவாயு அமைச்சகத்திடமிருந்து ரிலையன்சின் உற்பத்திச் செலவுகள் குறித்த விவரங்களை கோரிப் பெற்றிருக்கிறது. 2011-12 ஆம் ஆண்டுக்கான ரிலையன்ஸ் நிறுவனத்தின் நிதி அறிக்கையின்படி கிருஷ்ணா-கோதாவரிப் படுகையிலிருந்து எடுக்கப்படும் எரிவாயுவின் மொத்த செலவு (வரி உட்பட) யூனிட் ஒன்றுக்கு 2.74 டாலர்தான். ஆதாரபூர்வமான இந்த விவரத்தின்படி, தற்போது அரசு அறிவித்திருக்கும் விலையேற்றம் என்பது அயோக்கியத்தனமானது என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியும். வலது கம்யூனிஸ்டு எம்.பி. குருதாஸ் தாஸ்குப்தா இவ்விவரங்கள் அடிப்படையில் விளக்கங்கள் கோரியும், எதற்கும் கல்லுளிமங்கன் மன்மோகன் சிங் பதிலளிக்கவில்லை.

உண்மை நிலவரத்துக்கு முரணாகவும், தன்னுடைய அமைச்சக அதிகாரிகளின் சிபாரிசுகளுக்கே எதிராகவும், ரிலையன்ஸ் நிறுவனம் ஆதாயமடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக அரசு இந்த விலையேற்றத்தை அறிவித்திருப்பதாகக் குற்றம் சாட்டி, குருதாஸ் தாஸ்குப்தாவும், முன்னாள் மின்சாரத்துறை செயலர் இ.ஏ.எஸ். சர்மாவும் உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள்.

கே.ஜி. எண்ணெய் வயல்களை வளைத்துப் போட்டுள்ள ரிலையன்ஸ் நிறுவன அதிபர் அம்பானி (இடது) மற்றும் அவரின் கையாளைப் போல நடந்து கொள்ளும் பெட்ரோலியத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி.



இது மட்டுமல்ல, நான் சொன்ன விலையைத் தராதவரை, எரிவாயுவை எடுக்க மாட்டேன் என்று முகேஷ் அம்பானி உற்பத்தியை முடக்கியதன் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில்மின் உற்பத்தி மற்றும் உர உற்பத்தியில் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தின்மொத்த மதிப்பு சுமார் 1,10,000 கோடி ரூபாய் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. உற்பத்திச் செலவைக் கூடுதலாக காட்டி ரிலையன்ஸ் நிறுவனம் 30,000 கோடி ரூபாய் மோசடி செய்திருப்பதை ஏற்கெனவே கணக்குத் தணிக்கை

யாளர் அறிக்கை அம்பல மாக்கியிருக்கிறது. இத்த கைய மோசடிகளில் ஈடு பட்ட ரிலையன்சு அதிகாரி களையும், துணை நின்ற ஹைட்ரோ கார்பன் துறை யின் ஓய்வு பெற்ற இயக் குநர் வி.கே.சிபல் உள்ளிட்ட அரசு அதிகாரி களையும் கைது செய் வதற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சி.பி.ஐ. 2012-இலேயே கூறியும், வழக்கு பதிவு செய்யப்படாமல் முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது.



கே.ஜி. எண்ணெய் வயல்களின் 30 சதவீதப் பங்கை, ரிலையன்ஸ் நிறுவனம் பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனத்திற்குத் தாரை வார்க்கும் ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன: ஊரான் வீட்டு நெய்யே, எம் பொண்டாட்டி கையே! (கோப்புப் படம்)

இவ்வளவு பாரிய குற் றச்சாட்டுகள் எதையும் கடு களவும் பொருட்படுத்தாமல் ஜூலை 26-ஆம் தேதி எண் ணெய் எரிவாயுத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

''சி.பி.ஐ.க்கோ அல்லது கணக்குத் தணிக்கை யாளாருக்கோ நாம் பயப்படக்கூடாது. தைரியமாக முடிவு எடுக்க வேண்டும். எக்ஸான் போன்ற பன்னாட்டு நிறு வனங்கள் இந்தியாவுக்கு வர ஏன் தயங்குகிறார்கள்? முடி வெடுப்பதில் நாம் மந்தமாக இருப்பதுதான் காரணம். நமக்கு தைரியம் வேண்டும்.''

அமைச்சரின் கூற்றையும், அம்பானியின் கூற்றையும் படிப்பவர்கள், கோதாவரி ஆற்றுப் படுகையும், எண் ணெய்க் கிணறுகளும் அம்பானியின் பூர்வீக சொத்துபோ லும் என்று எண்ணிவிடக்கூடும். ஆதலால், இந்த எரி வாயுக் கொள்ளையின் பின்புலத்தை மீண்டும் ஒருமுறை கூற வேண்டியிருக்கிறது.

•••

**த**னியார்மய-தாராளமயக் கொள்கைகளின் கீழ் 1999-இல் வாஜ்பாயி ஆட்சிதான் எண்ணெய் துரப்பணத் துறையில் தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவ னங்களை முதன் முதலாகப் புகுத்தியது. புதிய துரப்பண உரிமக் கொள்கை ( New Exploration Licensing Policy) என்று அழைக்கப்பட்ட கொள்கையின் கீழ், கடற்பகுதி உள்ளிட்ட கிருஷ்ணா-கோதாவரிப் படுகையில், 7645 சதுர கி.மீ. பரப்பில் எண்ணெய்-எரிவாயு இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கும் எடுப்பதற்குமான ஒப்பந் தத்தை ரிலையன்ஸ் நிறுவனத்துடன் அரசு செய்து கொண்டது.

2000 முதல் 2008 வரை மூன்று கட்டங்களாக நடை பெற்ற ஆய்வுகளில் மொத்த 18 இடங்களில் (340 சதுர கி.மீ.) இயற்கை எரிவாயுவும், ஒரு இடத்தில் (50 சதுர கி.மீ.) எண்ணெயும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஒப்பந்தப்படி எண்ணெய் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்ட இந்த 390 சதுர கி.மீ. தவிர, மீதமுள்ள இடத்தை ரிலை யன்ஸ் நிறுவனம் அரசிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் மீதமுள்ள இடத்தை ஒப்படைக் காமல், அங்கேயும் எரிவாயு இருக்கக்கூடும் என்று நம்பு வதால், மொத்த இடமும் தன் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்று கோரினார் முகேஷ் அம்பானி. இந்த மோசடித்தனமான கோரிக்கையை மன்மோகன் அரசு அங்கீகரித்தது.

எடுக்கப்படும் எண்ணெய் எரிவாயுவைப் பகிர்ந்து கொள்வதற்கு பா.ஜ.க. அரசு போட்ட ஒப்பந்தமோ சூது நிறைந்தது. எண்ணெய்க் கிணறுகளைஅமைப்பதற்கு ரிலையன்ஸ் நிறுவனம் போட்டிருக்கும் முதலீட்டைப் போல 1.5 மடங்கு வருவாயை ஈட்டும் வரை, கிடைக்கும் வருமானத்தில் 10%மும், 2 பங்கு வருவாயை ஈட்டும் வரை 16%மும், 2.5 பங்கு வருவாயை ஈட்டிய பின்னர் 28% முதல் 85% வரையிலும் அரசுக்கு ராயல்டி தொகையாகத் தரவேண்டும் என்றும் ஒப்பந்தம் போட்டது வாஜ்பாய் அரசு.

முதலீடு செய்த தொகையை கூட்டிக் காட்டியதன் மூலம் அரசுக்கு கொடுக்கப்படும் ராயல்டி 10%ஐ தாண் டாமல் பார்த்துக் கொண்டார் அம்பானி. மொத்த முதலீடு 240 கோடி டாலர் என்று 2004-ஆம் ஆண்டில் கணக்குச் சொன்ன ரிலையன்ஸ், 2006-இல் 880 கோடி டாலராக முதலீடு உயர்ந்து விட்டதென்று கணக்கு காட்டியது. இந்த பொய்க்கணக்கை மன்மோகன் அரசு அப்படியே ஒப்புக்கொண்டது.

எரிவாயுவிற்கான விலையைத் தீர்மானிப்பதிலும் ரிலையன்ஸ் தன் கைவரிசையைக் காட்டியது. 2004-ல் தேசிய மின் உற்பத்திக் கழகம் அறிவித்த சர்வதேச டெண்டரில் பங்கேற்று, யூனிட்டிற்கு 2.34 டாலர் என்ற விலையில் 17 ஆண்டுகளுக்கு எரிவாயுவை சப்ளை செய்வதாக ரிலையன்ஸ் ஒப்புக்கொண்டது. மறுகணமே, விலையை உயர்த்தினால்தான் சப்ளை செய்ய முடியும் என்று கூறி சப்ளையை நிறுத்தியது. இதற்கிடையில் 2007-இல் பிரணாப் முகர்ஜி தலைமையிலான அமைச்



ரிலையன்ஸுக்குச் சாதகமாக இயற்கை எரிவாயுவின் விலை உயர்த்தப்பட்டிருப்பதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடுத்துள்ள சி.பி.ஐ. எம்.பி. குருதாஸ் தாஸ் குப்தா (இடது) மற்றும் முன்னாள் மின்துறை செயலர் இ.ஏ.எஸ்.சர்மா.

சரவை சிறப்புக் குழு எரிவாயுவின் விலையை (2014-ஆம் ஆண்டுவரை) யூனிட்டிற்கு 4.2 டாலராக உயர்த்திக் கொடுத்தது. 2004 முதல் 2009 வரையிலான இதேகாலத்தில்பொதுத்துறை நிறுவனமான ஓ.என்.ஜி.சி, தன்னுடைய எண்ணெய் கிணறுகளில் கிடைக்கும் எரிவாயுவை 1.83 டாலர் விலையில் இந்தியாவில் விற்று லாபமும் ஈட்டி வந்தது என்பதையும் இங்கே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

கோதாவரிக் கிணறுகளில் உற்பத்திதொடங்கிய காலத்திலிருந்தே தீர்மானித்த அளவிற்கு எரிவாயு உற்பத்தி நடந்ததே இல்லை. தஞ்சையைப் போன்று ஏறத்தாழ இரண்டு மாவட்டங்களின் பரப்பளவுள்ள பகுதியில் இருக்கும் நாட்டுக்குச் சொந்தமான எண்ணெய் எரிவாயு வளத்தைத் தன் பிடியில் வைத்துக் கொண்டு, கொள்ளை இலாபம் கிடைக்கும்வரை எரிவாயுவை எடுக்கவிட மாட்டேன் என்று முடக்கி வைத்திருக்கிறது ரிலையன்ஸ். தனது நோக்கத்தை மறைக்கும் பொருட்டு தொழில்நுட்பப் பிரச்சினை என்று பொய்க் காரணம் கூறி வருகிறது ரிலையன்ஸ் நிறுவனம்.

2011-இல் கோதாவரி படுகை கிணறுகளின் 30% பங்குகளை 720 கோடிடாலருக்கு பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு விற்றிருக்கிறார் அம்பானி. அங்கே இருக்கக் கூடிய எரிவாயு வளத்துக்கு இதுவே சான்று. அலைக்கற்றையை குறைந்த விலைக்கு ஏலம் எடுத்து, அதிக விலைக்குப் பங்குகளை விற்று கொள்ளை இலாபம் பார்த்ததைப் போலவும், நிலக்கரி வயல் கொள்ளையைப் போலவும் நடந்துள்ள இந்த பங்கு விற்பனையையும் மன்மோகன் தலைமையிலான அமைச்சரவை குழு அங்கீகரித்தது.




இப்போது அம்பானிக்கு குத்தகைக்கு விடப்பட்ட அந்த இடத்தின் மீது பிரிட்டிஷ் பெட்ரோலியத்துக்கும் அதிகாரம் வந்துவிட்டது. திரவ வடிவிலான எரிவாயுவை என்ன விலைக்கு இந்தியா இறக்குமதி செய்கிறதோ அதே விலையை (ஒரு யூனிட் 14.2 டாலர்) தங்களது எரிவாயுவுக்கும் தரவேண்டும் என்று பிரிட்டிஷ் பெட்ரோலியமும் அம்பானியும் சேர்ந்து கோருகின்றனர்.

நம்முடைய வீட்டில் குழாய்க் கிணறு தோண்டித் தருவதற்கு வந்தவன், கிணறு தோண்டிய பின், பாட்டில் தண்ணீர் 15 ரூபாய் விற்பதால் எனக்கும் அந்த விலை கொடு, இல்லையேல் தண்ணீர் தர மாட்டேன் என்று கூறுவதற்கு ஒப்பான அடாவடித்தனம்தான் இந்தக் கோரிக்கை. வாரிசிலிக் கொள்கை, துணைப்படைக் கொள்கை போன்ற பல சூழ்ச்சிகளின் மூலம் இந்திய சமஸ்தானங்களை கைப்பற்றிக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கைக்கும் இதற்கும் எந்த வேறுபாடும் இல்லை. வெல்லெஸ்லி, டல்ஹௌசி பிரபுக்களுக்குப் பதிலாக மன்மோகன், அலுவாலியா போன்றோர் அமர்ந்திருக்கிறார்கள் என்பது மட்டும்தான் வேறுபாடு.

அவ்வப்போது கூச்சல் போட்டு நாடாளுமன்றத்தை முடக்கும் பாரதிய ஜனதா, இந்த விவகாரம் பற்றி மூச்சு விடவில்லை. வலது, இடது கம்யூனிஸ்டுகள் தவிர வேறு எந்தக் கட்சியும் இதை எதிர்த்து ஒரு வார்த்தை பேசவில்லை. அம்பானிக்கு அடிபணிய மறுத்த மணிசங்கர் ஐயரும், ஜெய்பால் ரெட்டியும் அமைச்சர் பதவியிலிருந்து தூக்கியடிக்கப் பட்டார்கள். தற்போது எரிவாயு விலை நிர்ணயப் பொறுப்பில் இருக்கும் அர்மானே

என்ற அதிகாரி அம்பானிக்கு ஒத்துழைக்கவில்லை என்பதால் அவரை அகற்ற முனைகிறார் வீரப்ப மொய்லி.

சொல்லிக் கொள்ளப்படும் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் யோக்கியதை இதுதான். கையை முறுக்கி காரியம் சாதிப்பதுதான் சந்தை சுதந்திரம்! பொச் சொத்துகளை முதலாளிகள் ஆக்கிரமிப்பதுதான் தனியார் மயத்தின் கீழான தொழில் வளர்ச்சி. அம்பானியின் வருவாய் அதிகரிப்பதுதான் தேசிய மொத்த வருவாயின் அதிகரிப்பு! இந்திய மண்ணில் எடுக்கப்படும் எரிவாயுவுக்கான விலையை அமெரிக்க டாலரில் நிர்ணயிப்பதுதான் தாராளமயக் கொள்கை!

அம்பானியின் எண்ணெக் கிணறுகள் கிருஷ்ணா கோதாவரி ஆற்றுப்படுகையின் வளமான விளைநிலங்களை உவர் நிலங்களாக மாற்றி, தங்களதுவாழ்வாதாரத்தையே அழித்து வருவதைக் கூறிக் குமுறுகிறார்கள் அப்பகுதி விவசாயிகள். அம்பானியின் விளை பொருளுக்கு நியாயவிலை வழங்கத் துடிக்கும் மன்மோகன் அரசின் காதில் விவசாயிகளின் குரல் விழாததில் வியப்புமில்லை.

23.8.2013 அன்று பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனமும், ரிலையன்சும் இணைந்து ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றனர். கோதாவரிப் படுகைக்கு இணையான அளவில் காவிரிப் படுகையிலும் எரிவாயு இருப்பதை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்களாம். கொள்ளைக்கூட்டம் நம் வாயிற்கதவைத் தட்டுகிறது. என்ன செய்யப் போகிறோம்?

• அஜித்

# போலி சுதந்திரத்தைத் திரைகிழித்து புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்!

**நா**ட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமையை அமெரிக்காவிடமும் ஏகாதிபத்திய முதலாளிகளிடமும் தாரைவார்த்துள்ள துரோக ஆட்சியாளர்களையும் ஆகஸ்ட் -15 போலி சுதந்திரத்தையும் அம்பலப்படுத்தி ‘‘போலி சுதந்திரம் - இதற்கேன் கொண்டாட்டம்? கவர்னர் ஜெனரல் மன்மோகன் தலைமையில் மறுகாலனியாகிறது நாடு! வளர்ச்சி, வல்லரசு, சுதந்திரம் என்பதெல்லாம் ஃபிராடு! உண்மையான சுதந்திரம், சுயசார்பு, ஜனநாயகத்துக்காகக் போராடுவோம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!’’ என்ற முழக்கங்களுடன் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் கடந்த ஆகஸ்ட் மாத மத்தியில் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன.

ஓசூரில், பொதுமக்கள் திரளும் இடங்களில் சுவரொட்டிகள் வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் பிரச்சாரத்தை மேற்கொண்ட பு.ஜ.தொ.மு. தோழர்கள், அதன் தொடர்ச்சியாக 13.8.2013 அன்று தர்கா பேருந்து நிறுத்தம் அருகே தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர். போலி சுதந்திர நாளன்று பாகலூர் பகுதியில் உழைக்கும் மக்களைத் திரட்டி மறுகாலனியாதிக்கத்தையும் போலி சுதந்திரத்தையும் விளக்கி அறைக்கூட்டத்தை நடத்தினர். தருமபுரி மாவட்டத்தில் போலி சுதந்திரத்தைத் திரைகிழித்து சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்ட வி.வி.மு. தோழர்கள், நாடும் மக்களும் ஏகாதிபத்தியங்களுக்கு அடிமையாக்கப்பட்டுள்ளதை விளக்கி பென்னாகரம் வட்டத்தின் பல கிராமங்களில் தெருமுனைப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டதோடு, விவசாயிகளையும் ஆதரவாளர்களையும் திரட்டி அறைக்கூட்டங்களையும் நடத்தினர்.

இப்பிரச்சாரத்தைக் கண்டு பீதியடைந்த ஆட்சியாளர்கள், சுவரொட்டி பிரச்சாரத்தின் மூலம் பொது அமைதிக்குத் தீங்கு விளைவித்ததாக புலிக்கரை கிராமத்தைச் சேர்ந்த வி.வி.மு. தோழர் இராமலிங்கத்தை போலீசை ஏவி கைது செய்து பொய்வழக்கு சோடித்து சிறையிலடைத்துள்ளனர். தருமபுரி பேருந்து நிலையம் அருகே துண்டுப் பிரசுரம் விநியோகித்த வி.வி.மு. வட்டச் செயலரான தோழர் சிவா, தேசத்துரோக வழக்கு உள்ளிட்டு பல பொய்வழக்குகள் சோடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆகஸ்டு -15 சுதந்திரம் மோசடியானது மட்டுமல்ல, கொடூரமானது என்பதை இப்பொய்வழக்குகளும் கைதுகளும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.




- பு.ஜ. செய்தியாளர்கள்.

## வாராக் கடன்:


# கோட்டு சூட்டு போட்ட கோமான்கள் நடத்திய கொள்ளை!

**2,70,940 விவசாயிகளைக் கந்துவட்டிக் கடன் சுமை தற்கொலைக்குத் தள்ளியிருக்கும் நம் நாட்டில், வங்கிகளின் வாராக்கடனாக முதலாளிகள் ஏமாற்றியுள்ள தொகை 1,17,262 கோடி ரூபாய்.**

வங்கிகளின் வாராக்கடன் கடந்த இரண்டே ஆண்டுகளில் கிடுகிடுவென அதிகரித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள மைய அரசு, இந்த வாராக் கடன் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. மைய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி 2010-ஆம் ஆண்டு இறுதியில் 59,924 கோடி ரூபாயாக இருந்த வாராக் கடன் 2012-ஆம் ஆண்டு இறுதியில் 1,17,262 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது. இதில் பொதுத்துறை வங்கிகளின் பங்கு எவ்வளவு என்று தனியாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும், இந்த வாராக் கடன் குறித்து சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியாவின் முன்னாள் துணை பொது மேலாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன் தினமணியில் (28.03.2013) எழுதியுள்ள ஒரு கட்டுரையில், ''2012 டிசம்பரில் பொதுத்துறை வங்கிகளின் மொத்த வாராக் கடன் 1,55,000 கோடி ரூபாயாக இருந்தது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரண்டில் எது உண்மை என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது என்றாலும், இந்த இரண்டிலும் ஒரு விடயம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. சி.பி.ஐ. இயக்குநர் ரஞ்சித் சின்ஹா, ''இந்த மொத்த வாராக் கடனில் பெரும் பகுதி ஒரு முப்பது நிறுவனங்களிடம் தேங்கியிருக்கிறது'' என வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறார். ''பொதுத்துறை வங்கிகளின் மொத்த வாராக் கடனில் 54 சதவீதம் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களாகும். 100 கோடி ரூபாய்க்கு மேல் கடன் பெற்றுள்ள 172 கார்ப்பரேட் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொகை 31,194 கோடி ரூபாயாகும்'' எனக் குறிப்பிட்டுள்ளார், எஸ்.கோபாலகிருஷ்ணன்.

பொதுத்துறை வங்கிகளிடமிருந்து 7,500 கோடி ரூபாய் கடனை வாங்கி ஏப்பம் விட்டுள்ள சீமைச்சாராய தொழில் அதிபர் விஜய் மல்லையா.




இந்த வாராக் கடன்கள் ஒருபுறமிருக்க, கடனுக்கான வட்டியைக் குறைத்து, திருப்பிக் கட்டுவதற்கான தவணை முறைகளை நீட்டிப்புச் செய்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமாகக் கடன்களை மாற்றியமைக்கும் (Loan restructuring) மோசடிகளிலும் வங்கிகள் ஈடுபட்டுள்ளன. அதாவது, இவை வாராக் கடன் பட்டியலுக்குள் வராத வாராக் கடன்கள். பொருளாதார நெருக்கடிக்குப் பின் இப்படி மாற்றியமைக்கப்பட்ட கடன் தொகை 5 இலட்சம் கோடி ரூபாயாகும் என்றும் இவை குறித்தும் சி.பி.ஐ. விசாரிக்குமெனக் கூறப்படுகிறது.

இவையிரண்டுக்கும் அப்பால் வங்கி அதிகாரிகளும் கார்ப்பரேட் நிறுவனங்களும் கூட்டுச் சேர்ந்து கொண்டு நடத்தியிருக்கும் மோசடிகள் தனிக்கதை. வாராக் கடனைச் சட்டபூர்வ மோசடி எனக் கூறினால், பின்னதை சட்டவிரோதமாக நடந்துள்ள மோசடிகள் எனக் குறிப்பிடலாம். ''கடந்த பத்தாண்டுகளில் வங்கிகளில் நடந்துள்ள மோசடிகளின் எண்ணிக்கை 1,76,547; இம்மோசடிகளின் மூலம் 31,400 கோடி ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது; இம்மோசடிகளுள் பெரும்பாலானவை கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் தனியாருக்குக் கடன் வழங்குவது தொடர்பாக நடந்தவை; இந்த மோசடி வழக்குகளுள் ஒரு குறிப்பிட்ட 61 வழக்குகள் 50 கோடி தொடங்கி 13,000 கோடி ரூபாய் வரை கையாடல் நடந்திருக்கும் வழக்குகள்'' என ஒப்புக் கொண்டிருக்கிறார், ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் கே.சி.சக்கரவர்த்தி.

பல்வேறு இடதுசாரி அமைப்புகளும் வங்கி ஊழியர் சங்கமும் பத்தாண்டுகளுக்கு முன்பே வாராக் கடன்கள் பொதுத்துறை வங்கிகளைச் செல்லரித்துக் கொண்டிருப்பதை அம்பலப்படுத்தியதோடு, கடனை அடைக்காமல்

கிடப்பில் போட்டு வைத்திருக்கும் முதலாளிகளின் பெயர்களைப் பகிரங்கமாக வெளியிட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தன. அப்பொழுதும் சரி, இப்பொழுது வாராக் கடன்களை சி.பி.ஐ. விசாரிக்கப் போவதாகப் பூச்சாண்டி காட்டிவரும் வேளையிலும் சரி, அக்கார்ப்பரேட் முதலைகளின் பெயரை வெளியிடுவதற்குக்கூட மைய அரசு தயாராக இல்லை.



வங்கி அதிகாரிகளும் கார்ப்பரேட் முதலாளிகளும் சேர்ந்து கொண்டு நடத்தும் மோசடிகள் அதிகரித்துக் கொண்டே போவதை ஒப்புக் கொண்ட ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் கே.சி. சக்கரவர்த்தி.

கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கிவிட்டு, அதனைக் கட்டத் தவறும் விவசாயிகளுக்கு ஜப்தி நோட்டீஸ் அனுப்பப்படுகிறது; நகைக் கடன் மற்றும் சிறுதொழில் தொடங்க கடன் வாங்கிவிட்டு, அதனைக் கட்டத் தவறுபவர்களின் பெயர்கள் முகவரியோடு வெளியிடப்படுகின்றன; சமீபத்தில் சத்தியமங்கலம் பகுதியில் கல்விக் கடன் வாங்கி, கட்டத் தவறிய மாணவர்களின் புகைப்படங்கள் வங்கி வாசலிலேயே ஒட்டப்பட்டு, அவர்கள் அவமானப்படுத்தப்பட்டனர். விவசாயிகள் பயிர் பொய்த்து விட்டதென்று, கடன் வாங்கிப் படித்த மாணவர்கள் வேலை கிடைக்கவில்லையென்று கூறும் நாணயமான காரணங்களை வங்கியும் அரசும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதேயில்லை. இவர்களிடமிருந்து கடனை வசூலிப்பதில் கந்துவட்டி ரவுடிக் கும்பலைப் போலவே நடந்து கொள்ளும் வங்கிகள், கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதில், அதனை வசூலிப்பதில் வேறு அணுகுமுறையைக் கையாளுகின்றன.

பொருளாதார வளர்ச்சி என்ற மொன்னையான காரணத்தை முன்வைத்து இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் கடன் கொடுப்பதை அரசும் வங்கிகளும் மிகவும் எளிமையாக்கிவிட்டன. நானூறு கோடி ரூபாய் மற்றும் அதற்கும் மேற்பட்ட கடனைக்கூட ஒரு மூன்று உயர் அதிகாரிகள் கூடிப் பேசி ஒப்புதல் அளித்து விடுவதற்கு ஏற்ப விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன. இந்த தாராளமயம்தான் வாராக் கடனும் மோசடிகளும் பெருகிக் கொண்டே போவதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது.

விவசாயிகளைவிட, சிறுதொழில் அதிபர்களை விட, சந்தையின் நெளிவு சுளிவுகளும், அதன் ஏற்ற இறக்கங்களும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குத்தான் நன்கு தெரியும். இதனைக் கண்காணிப்பதற்காகவே நிபுணர்களின் பட்டாளத்தை ஆலோசகர்களாக, ஊழியர்களாக கார்ப்பரேட் நிறுவனங்கள் நியமித்துக் கொள்கின்றன. தொழில் தொடங்குவதற்கு வங்கிகள் மூலம் கடனையும், பங்குச் சந்தையின் வழியாக முதலீட்டையும் திரட்டிக் கொள்வதோடு, வரிச் சலுகை உள்ளிட்டுப் பல்வேறு சலுகைகளையும் அரசிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

விவசாயத்திற்குக் கடன் அளிப்பதற்கு 8 சதவீதத்திற்கும் மேல் வட்டி விதிக்கும் நாபார்டு வங்கி, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 6.5 சதவீத வட்டிக்குக் கடன் அளித்துள்ளன. ஒரு ஆடம்பர காரை வாங்குவதற்கு 8% வட்டியில் கடன் அளித்துவரும் வணிக வங்கிகள், டிராக்டர் கடனுக்குப் போடும் வட்டி 14 சதவீதம். கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கடன் கொடுப்பதில் பொதுத்துறை வங்கிகளிடையே உள்ள போட்டி, 5 சதவீத வட்டியில் பெரு முதலாளிகள் வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதைச் சாத்தியமாக்கியுள்ளது. கந்துவட்டி, மீட்டர் வட்டிக்குக் கடன் வாங்கித் தொழில் நடத்தும் சிறு முதலாளிகளுக்கெல்லாம் கிடைக்காத சலுகை இது.

இதுவொருபுறமிருக்க, தொழில் சற்று சுணக்கமடைந்தால்கூட, கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் அரசிடம் பேரம் நடத்திப் பல்வேறு பணச் சலுகைகளைக் கொண்ட ஊக்குவிப்பு பொதிகளைப் (stimulus package) பெற்றுக் கொள்கிறது. அவர்கள் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனுக்கான வட்டி மேலும் குறைக்கப்பட்டு, தவணை முறை தள்ளிவைக்கப்பட்டு, அவர்களைக் கைதூக்கி விடப் பலவிதமான முயற்சிகளை அரசே முன்நின்று மேற்கொள்கிறது.

மிகப் பெரும் தரகு முதலாளியான விஜய் மல்லையா நடத்திவந்த கிங் ஃபிஷர் விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்குப் பொதுத்துறை வங்கிகள் 7,500 கோடி ரூபாய்க்கு மேல் கடன் கொடுத்துள்ளன. கிங் ஃபிஷர் சற்று தள்ளாடத் தொடங்கியவுடனேயே, கடன் கொடுத்த

***வங்கிகளில் கடன் வாங்கித் தொடங்கிய தொழிலில் இலாபம் கொட்டும்பொழுது, வரியைக்கூட நாணயமாகக் கட்டாமல் வாரிச்சுருட்டிக் கொண்டு போகும் கார்ப்பரேட் முதலாளி வர்க்கம், தொழில் 'நட்டமடைந்தால்', அதனைச் சமூகத்தின் மேல் சுமத்தி விட்டுத் தப்பித்துக் கொள்கிறது.***

வங்கிகள் அந்நிறுவனம் உடனடியாகத் திருப்பிச் செலுத்த வேண்டிய 1,600 கோடி ரூபாயைப் பணமாகப் பெற்றுக் கொள்ளாமல், அந்நிறுவனத்தின் பங்குகளாகப் பெற்றுக் கொண்டன. அதுவும் அப்பங்குகளின் சந்தை விலையைவிட 62 சதவீதம் அதிகமாக விலை வைத்து, ஒரு பங்கை 60 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டன. இதுவன்றி, அந்நிறுவனத்தின் கடனும் மறுஒழுங்கமைக்கப் பட்டது.



பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தங்களுக்குத் தொழில் கடன் வழங்கக் கோரி, பாட்னாவிலுள்ள ரிசர்வ் வங்கியின் கிளை அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தும் வேலையில்லா பட்டதாரிகள். (கோப்புப் படம்)

இப்பொழுது கிங் ஃபிஷர் திவாலாகிவிட்டது. ஆனால், விஜய் மல்லையாவின் சீமைச்சாராயத் தொழில் இலாபத்துடன்தான் நடந்துவருகிறது. கடன் கொடுத்த வங்கிகளோ தாம் கொடுத்த கடனுக்கு ஈடாக அவரது சீமைச்சாராய ஆலைகளைக் கைப்பற்ற வழியில்லாமல், தம் தலையில் கட்டப்பட்ட திவாலாகிப் போன கிங்ஃபிஷர் நிறுவனத்தின் பங்குகளையும் அதனின் சில அசையாச் சொத்துக்களையும் விற்று, கொடுத்த கடனை மீட்டுக்கொள்ள வேண்டிய இக்கட்டில் சிக்கிக் கொண்டுள்ளன.

இப்படி சொந்தக் கைக்காசைப் போடாமலேயே அரசிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் ஏராளமான மூலதனத்தையும் சலுகைகளையும் பெற்றுக் கொண்டு தொழில் நடத்தும் கார்ப்பரேட் நிறுவனங்கள், சந்தையின் அரிச்சுவடியை அறிந்தவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் கார்ப்பரேட் முதலாளி வர்க்கம், ''தொழில் நட்டமடைந்துவிட்டது; அதனால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போய்விட்டது'' எனக் கூறிக் கடனைக் கட்ட மறுப்பது எந்த வகையில் நியாயமாகும்? ஒரு தொழிலில் கிடைக்கும் இலாபத்தையும், அதனின் மூலதனத்தையும், அத்தொழிலைவிட அதிக இலாபம் தரும் வேறொரு தொழிலுக்குக் கடத்திக் கொண்டு போய் விடுவது, இலாபத்தைக் குறைத்துக்காட்டிப் பொய்க் கணக்கு எழுதுவது போன்ற தில்லுமுல்லுகள் மூலம் தான் பெரும்பாலான முதலாளிகள் நட்டக் கணக்கு காட்டுகிறார்கள். இந்த மோசடிகளை மூடிமறைக்கும் திரையாகப் பொருளாதார நெருக்கடி, சந்தையில் மந்தம் என முதலைக் கண்ணீர் விடுகிறார்கள். இப்படி நட்டமடைந்துவிட்ட தொழில்அதிபர்களில் ஒருவரும் கையில் திருவோடு எடுத்துக்கொண்டு தெருவுக்கு வந்துவிடவில்லை. மானத்திற்குப் பயந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் விவசாயிகளைப் போலத் தற்கொலை செய்து கொள்ளவுமில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

விஜய் மல்லையாவைப் போல வாராக் கடன் வைத்துள்ள ஒவ்வொரு கார்ப்பரேட் முதலாளியும் வேறு பல தொழில்களை நடத்தி வருவது ஊரறிந்த உண்மை. கிங் ஃபிஷர் நிறுவனத்திற்குக் கடன் கொடுத்த வங்கிகள் தமது கடனுக்கு ஈடாக விஜய் மல்லையாவின் சாராயத் தொழிலை எடுத்துக் கொள்வதைச் சட்டமும் அனுமதிப்பதில்லை; கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் மனசாட்சியும் அதற்கு இடம் தருவதில்லை. கடன் வாங்கித் தொடங்கிய தொழிலில் இலாபம் கொட்டும்பொழுது, வரியைக்கூட நாணயமாகக் கட்டாமல் வாரிச்சுருட்டிக் கொண்டு போகும் கார்ப்பரேட் முதலாளி வர்க்கம், தொழில் 'நட்டமடைந்தால்', அதனைச் சமூகத்தின் மேல் சுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்கிறது.

தேவையற்ற கட்டுப்பாடுகள் இருப்பதால்தான் ஊழல்கள் நடைபெறுகின்றன. அவற்றைத் தளர்த்திவிட்டால் ஊழலும் மோசடியும் ஒழிந்துவிடுமென தாராளமயத்திற்கு பட்டுக்குஞ்சம் கட்டியது, மன்மோகன் சிங் கும்பல். ஆனால், நடந்ததென்ன? 1991-இல் மன்மோகன் சிங் தனியார்மயம்-தாராளமயத்தைத் தொடங்கி வைத்தவுடனேயே, பொதுத்துறை வங்கிகள் பங்குச் சந்தை ஊழலில் சிக்கிக் கொண்டன. இந்த ஊழலும் மோசடிகளும் நாளுக்குநாள் பெருத்துக் கொண்டே போவதைத்தான் வங்கிகளின் வாராக் கடனும், அங்கு நடந்துள்ள 31,400 கோடி ரூபாய் பெறுமான மோசடிகளும் நிரூபிக்கின்றன. இரகசிய உலகப் பேர்வழிகள், கார்ப்பரேட் முதலாளிகள் ஆகியோரின் கருப்புப் பணத்தைக் கடத்துவதற்கு, வெள்ளையாக மாற்றுவதற்குத் துணைபோகும் அளவிற்கு வங்கிகளின் நாணயம் வீழ்ச்சியடைந்துவிட்டது.

இத்தகைய சூழலில்தான் கார்ப்பரேட் நிறுவனங்கள் தமது சொந்த வங்கிகளைத் திறந்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது திருடன் கையிலேயே பெட்டிச்சாவியைக் கொடுப்பதற்குச் சமமானது. இந்த இலட்சணத்தில் வங்கிகளில் கடனை வாங்கிவிட்டு ஏப்பம் விட்டுள்ள கார்ப்பரேட் முதலாளிகள் குறித்து சி.பி.ஐ. விசாரிக்கப் போகிறது என அரசு உத்தரவிட்டிருப்பதுதான் மிகப் பெரிய நகைச்சுவை!

● ரஹீம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

# சில்லறை வணிகத்தில் பன்னாட்டு மூலதனம்: நல்லவர் மன்மோகனின் நயவஞ்சக முகம்!

**சி**ல்லறை வர்த்தகத்தில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பெயரளவிலான சில கட்டுப்பாடுகளையும் ஆகஸ்டு மாதம் முதல் நீக்கியிருக்கிறது இந்திய அரசு. இரண்டாண்டுகளாக இப்பிரச்சினையை இழுத்துடித்து இதற்கெதிரான போராட்டங்களைக் களைப்படையச் செய்து, கடைசியாகத் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டு விட்டது மன்மோகன் அரசு.

கடந்த 2011-ஆம் ஆண்டு நவம்பரில் ஒற்றை இலச்சினை சில்லறை வணிகத்தில் 100 விழுக்காடு அந்நிய மூலதனத்தையும், பல் இலச்சினை சில்லறை வணிகத்தில் 51% அந்நிய நேரடி முதலீட்டையும் மைய அரசு அனுமதித்தது. நாடு முழுவதும் எழுந்த எதிர்ப்புகள் காரணமாக பிரச்சினையை சற்று ஆறப் போட்டது. பிறகு உள்நாட்டுத் தொழில்களையும் விவசாயத்தையும் பாதுகாப்பதைப் போன்றதொரு தோற்றத்தைக் காட்டுவதற்காக, ''அந்நிய நிறுவனங்கள் தாம் விற்பனை செய்யும் பொருட்களில் குறைந்தபட்சம் 30% இந்தியாவில் உள்ள சிறுதொழிற்கூடங்களிலிருந்து வாங்க வேண்டும்; தங்களது முதலீட்டில் 50% தொகையை குளிரூட்டப்பட்ட கிட்டங்கிகள் போன்ற பின்புலக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு ஒதுக்க வேண்டும்; பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட நகரங்களில் மட்டுமே பன்னாட்டு வணிக நிறுவனங்கள் அனுமதிக்கப்படும்'' - என்ற நிபந்தனைகளை அறிவித்தது.

இதனை வால்மார்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் எதிர்த்தன. இந்தியாவில் முதலீடு செய்ய மறுத்தன. இந்தியாவின் பொருளாதாரம் வீழ்ந்து வருவதாகவும், கடன் பெறுவதற்கானதரவரிசையில் இந்தியாவைக் கீழிறக்கப் போவதாகவும் ஸ்டாண்டர்டு அண்டு புவர் என்ற தரமதிப்பீட்டு நிறுவனம் மிரட்டியது. ஜூன் 2012 - இல் கையாலாகாதவர் என்று மன்மோகன் சிங்கைப் பற்றி அட்டைப் படக்கட்டுரை வெளியிட்டது அமெரிக்காவின் டைம் வார ஏடு. இம்மிரட்டல்களைத் தொடர்ந்து செப். 2012 - இல் உள்ளூர் கொள்முதல் குறித்த நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன. இதற்கும் வால்மார்ட் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் மசியவில்லை. தற்போது இந்தக் கட்டுப்பாடுகளையும் தளர்த்துவதாக இந்திய அரசு அறிவித்துவிட்டது.




முதலாவதாக, சிறுதொழில் என்பதன் முதலீட்டு வரையறையை 10 லட்சம் டாலரிலிருந்து 20 லட்சம் டாலருக்கு (13 கோடி ரூபாய்) உயர்த்தியதன் மூலம், சிறுதொழில் என்பதன் பொருளே கேலிக்கூத்தாக்கப் பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் தங்களது முதலீட்டில் பாதியை பின்புலக் கட்டமைப்பில் முதலீடு செய்ய வேண்டும் என்பது, அவர்களது முதல் 10 கோடி டாலர் முதலீட்டுக்கு மட்டுமேபொருந்தும் என மாற்றப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, பத்து லட்சம் மக்கட்தொகைக்கு உட்பட்ட நகரங்களிலும் பன்னாட்டு சில்லறை வணிக நிறுவனம் தொடங்கலாம் என்று அனுமதி தரப்பட்டிருக்கிறது.

சுமார் 50,000 கோடி டாலர் மதிப்புள்ளதும், மக்கள் தொகையில் 20 கோடிப் பேருக்குச் சோறு போடுவதுமான இந்தியாவின் சில்லறை வணிகத்தை, பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்து விடாமல் தடுத்து விடுவோம் என்று பா.ஜ.க. முதல் அ.தி.மு.க. வரையிலான கட்சிகள் சவடால்அடித்தன. இவர்களை வெற்றிபெற வைப்பதன் மூலம் வால்மார்ட்டைத் தடுத்துவிட முடியும் என்று சிறு வணிகர்களும் நம்பினர். மறுகாலனியாக்கத்தின் அங்கமாக நடைபெறுகின்ற இந்த மாற்றங்களை, எவ்வளவு முயன்றாலும் தேர்தல் அரசியல் மூலம் தடுக்க இயலாது என்பதையே இந்நிகழ்வுகள் நிரூபிக்கின்றன. தேர்தல் அரசியலுக்கு வெளியே மறுகாலனியாக்கத்துக்கு எதிராக கட்டியமைக்கப்படும் போராட்டங்களால் மட்டும்தான் இதற்குத் தீர்வளிக்க முடியும் என்பது இன்னொரு முறை நிரூபணமாகியிருக்கிறது.

அன்பு

# அட்டைகளின் ஆட்சி! பட்டினிச் சாவுகள்!!



கேரளாவின் பாலக்காடு மாவட்டம், மன்னார்காட் வட்டத்திலுள்ள அட்டப்பாடி வனப்பகுதியில் வாழ்ந்து வரும் பழங்குடியினருக்குப் பிறக்கும் குழந்தைகள், பிறந்தவுடனேயோ அல்லது பிறந்து ஒரு சில மாதங்களுக்குள்ளாகவோ ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக இறந்து போகும் அவலச் செய்தி அண்மையில் அம்பலமாகியிருக்கிறது. தாய்க்குச் சத்தான உணவு கிடைத்தால் அல்லவா குழந்தைகள் ஊட்டத்துடன் பிறக்க முடியும். எனவே, இச்சாவுகள் அனைத்தும் அரைகுறை பட்டினியால் நேர்ந்தவை. கடந்த பதினாறு மாதங்களில் 46 குழந்தைகள் பட்டினிக்குப் பலியாகியுள்ளன. அவற்றுள் 35 பச்சிளங் குழந்தைகள் கடந்த எட்டே மாதங்களில் அடுத்தடுத்து இறந்துள்ளன. தற்சமயம் கிட்டத்தட்ட 260 பச்சிளங் குழந்தைகள் மரணத்தின் வாயிலில் கிடப்பதாகவும், 979 கர்ப்பிணிப் பெண்களுள் 417 பெண்கள் அபாய கட்டத்திலும், 98 பெண்கள் மிகவும் மோசமான அபாய நிலையில் இருப்பதாகவும் கேரள அரசின் சுகாதாரத் துறை தெரிவித்திருக்கிறது.

கேரளாவை வளர்ச்சியடைந்த மாநிலமென்றும், பொது சுகாதாரமும், ரேஷன் கடைகளும் மிகவும் சிறப்பாக நடைபெறும் மாநிலமென்றும் கூறுகிறார்கள். ஆனால், இவை எதுவுமே அட்டப்பாடி பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மக்களைச் சென்றடையவில்லை. அம்மாநிலத்தை மாறிமாறி ஆண்டு வரும் காங்கிரசு கும்பலாலும், போலி கம்யூனிஸ்டு கும்பலாலும் அப்பழங்குடியின மக்கள் இரண்டு வழிகளில் மோசடி செய்யப்பட்டதன் விளைவுதான் இப்பச்சிளங் குழந்தைகளின் சாவுகள்.

நாற்பது - ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தமது சொந்த நிலத்தில் உழுது பயிரிட்டு விவசாயிகளாக வாழ்ந்துவந்த பழங்குடியின மக்கள், இன்று குடியேறியவர்களாலும் தனியார் கார்ப்பரேட் கம்பெனிகளாலும் நிலங்கள் அபகரிக்கப்பட்டு, நிலமற்ற விவசாயக் கூலிகளாக ஆக்கப்பட்டுவிட்டனர். ''ஏறத்தாழ 10,000 ஏக்கருக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில், சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட நிலங்களைப் பழங்குடியின மக்களிடம் திருப்பித் தர வேண்டும் என நீதிமன்றங்கள் உத்தரவிட்டிருப்பதை காங்கிரசு அரசானாலும் கம்யூனிஸ்டு அரசானாலும் மதித்து நடந்ததேயில்லை'' எனக் குற்றஞ்சுமத்துகிறார், சின்னான் என்ற பழங்குடியின விவசாயி.

நிலம் அபகரிக்கப்படுவதற்கு முன் தமது சொந்த உணவை தாமே உற்பத்தி செய்து வாழ்ந்து வந்த அம்மக்களின் வாழ்க்கை அதன் பின் தடம் புரண்டது; அவர்களது கலாச்சாரம், உணவுப் பழக்க வழக்கங்களில் விரும்பத்தகாத தலைகீழ் மாற்றங்கள் புகுத்தப்பட்டதோடு, வேலைவாய்ப்பின்மையும், வறுமையும், ஏழ்மையும் அவர்களது வாழ்க்கையில் குடிபுகுந்தது.

பிறகு, அவர்களது வறுமையையும் ஏழ்மையையும் ஓட்டப் போவதாகக் கூறிக் கொண்டு நலத் திட்டங்கள் தீட்டப்பட்டன. கடந்த நாற்பது ஆண்டுகளில் அத்திட்டங்களை நிறைவேற்ற 1,000 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டது. நிலமற்று, அடிப்படை வசதிகள் ஏதுமற்று அம்மக்கள் வாழ்ந்துவரும் ஊர்களுக்குச் சென்று பார்த்தாலே, அரசியல்வாதிகள்-அதிகாரிகள்-காண்டிராக்டர்கள் என்ற ஒட்டுண்ணிக் கூட்டம் இந்த 1,000 கோடி ரூபாயைத் தின்று தீர்த்திருப்பதைப் புரிந்துகொண்டுவிட முடியும்.

உண்மை இவ்வாறிருக்க அம்மாநில பழங்குடியின நல அமைச்சர் ஜோசப், மேல்சாதி மேட்டுக்குடித் திமிரோடு, ''பழங்குடியின கர்ப்பிணிப் பெண்களுக்குச் சாராயம் குடிக்கும் பழக்கம் இருப்பதால்தான் குழந்தைகள் இறந்து போகின்றன'' என நஞ்சைக் கக்கினார். சாராயக் கடை நடத்துவதன் மூலமே அரசின் கஜானைவை நிரப்பிக் கொள்ளும் கும்பலுக்கு எத்துணை வாய்க்கொழுப்பு!

''எங்களது நிலத்தைத் திருப்பிக் கொடுங்கள்; குழந்தைகளின் சாவுகள் தானாக நின்றுவிடும்'' எனக் கோருகிறார்கள், பழங்குடியின மக்கள். ஆனால், காங்கிரசு கும்பலோ இந்தச் சாவுகளைக் காரணமாக வைத்து தின்று தீர்ப்பதற்கு 125 கோடி ரூபாய் பெறுமான சிறப்புத் திட்டமொன்றை அறிவித்திருக்கிறது.

அட்டப்பாடி என்றால் அட்டைகளின் பூமி என்று பொருளாம். அந்தப் பூச்சியினத்தைவிட, ஆளுங்கும்பல் என்ற இந்த அட்டைகள் அபாயகரமானவை அல்லவா!